Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




"இப்பிடியே இவையள் வழக்கோட மினக்கெட, இஞ்சால எல்லா அநியாயமும் நடக்கட்டும்"

# உதயன்

சுடர் : 39
கதிர் : 150

புதன்கிழமை
24 ஏப்ரல் 2024

சித்திரை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

# இலங்கையில் தமிழ்மக்கள் தொடர்ந்தும் ஒடுக்குமுறைக்குள்!

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

**கொழும்பு, ஏப்ரல் 24**

**இலங்கையில் மலையகத் தமிழர்களும், வடக்கு-கிழக்கு தமிழர்களும் அரசாங்கத்தால் திட்டமிட்டு ஒடுக்கப்படுகின்றனர் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

15

### புங்குடுதீவில் இன்று ஆரம்பமாகவிருந்த

## அகழ்வுப் பணிகள் திடீர் ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 24
புங்குடுதீவில் அவதானிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான அகழ்வுப் பணிகள் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் இன்று இடம்பெறவிருந்த நிலையில், திடீரென அந்த

15

## தமிழரசுக்கு எதிரான வழக்கு; ஆட்சேபனை இன்று சமர்ப்பிப்பு!

திருகோணமலை, ஏப். 24
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, அதன் மீதான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க அவகாசம் வழங்கப்பட்டு தவணையிடப்பட்டிருந்த நிலையில், இன்று மீண்டும்

15

## அநுரவுடன் விவாதிக்க இம்மாதமே நாம் தயார்

### சஜித் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 24
ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுடன் விவாதம் நடத்துவதற்கு ஜே.வி.பி.யினருக்கு முதுகெலும்பில்லையா? நாம் எதற்கும் அஞ்சவில்லை. இரு விவாதங்களையும் மே

15

### கொலை முயற்சி

## நீதிபதி இளஞ்செழியனின் சாட்சியம் இன்று பதிவு

யாழ்ப்பாணம், ஏப். 24
யாழ்ப்பாணத்தில் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில், நீதிபதி இளஞ்செழியனிடம் இன்றையதினம் சாட்சியம் பெறப்படவுள்ளது.
யாழ்ப்பாண உயர்நீதிமன்ற நீதிபதியாக, நீதி


08

## மனவளர்ச்சி குன்றிய பெண் கூட்டுப்பாலியல் பலாத்காரம்!

### போதைப்பொருளை நுகரச்செய்து கொடூரம் சகோதரனும் உடந்தையா என விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 24
மனவளர்ச்சி குன்றிய பெண் ஒருவரை, வலுக்கட்டாயமாக போதைப்பொருளை நுகரச் செய்து எட்டுப்பேர் கொண்ட கும்பல் தொடர்ச்சியாக கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியுள்ள விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சகோதரனே தன்னை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்தார் என்று அந்தப் பெண் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
தாய், தந்தையர் உயிரிழந்ததை அடுத்து குறித்த பெண், தன் சகோதரி ஒருவருடன் வசித்து வந்

15



## ஈரான் ஜனாதிபதி இலங்கை வருகை

### ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும்

கொழும்பு, ஏப். 24
உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம்

15

## எவருமற்ற வீட்டில் நகைகள் திருட்டு!

### தொண்டைமானாறில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 24
யாழ்ப்பாணம் , வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டைமானாறு பகுதியில், வீடொன்றில் இருந்து 5 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.
வீட்டில் எவரும் இல்லாத தருணத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட திருடர்கள் 5 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று

08




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சஜித்துடனான விவாதம்; சவாலுக்கு அநுர 'ரெடி'

கொழும்பு, ஏப்.24

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நடத்தவுள்ள விவாதத்துக்கான திகதிகளை தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு தேசிய மக்கள் சக்தி கடிதமொன்றை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுப்பி இந்த விடயத்தைத் தெரிவித்தது.

அதன்படி, எதிர்வரும் மே மாதம் 7ஆம், 9ஆம், 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதற்குத் தயாரென தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

சரியான திகதியொன்று நிர்ணயிக்கப்பட்டதன் பின்னரே விவாதத்துக்கான இடம், நேரம் மற்றும் விவாதம் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி போன்ற தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்றும் தேசிய மக்கள் சக்தி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் எந்தவொரு பகிரங்க விவாதத்துக்கும் தாம் தயார் எனப் பொதுவெளியில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் திகதி தொடர்பான அறிவிப்பு தற்போது அரசியல் களத்தில் சூடுபிடித்துள்ளது. (ச-இ)

# சு.கட்சியை யானை வாலில் இணைக்க அனுமதிக்கோம்

## துஷ்மந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.24

சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீதி அமைச்சர் விஜயதாஸவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரான துஷ்மந்த மித்ரபால நிராகரித்தார். சுதந்திரக்கட்சியை யானை வாலுடன் இணைப்பதற்குத் தாம் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

'நிமால் சிறிபாலடி சில்வாவின் நியமனம் சட்டபூர்வமானது அல்ல. அரசியல் சபையால் பதில் தலைவரை நியமிக்க முடியாது. அக்குழுவை தேர்தல் ஆணைக்குழுவும் ஏற்கவில்லை. சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்சவை களமிறக்குவதற்கு கட்சி முடிவெடுத்தால் அதனை ஏற்கவேண்டும் - என்றார். (ஒ-44)

# ஜனாதிபதித் தேர்தலில் ரொஷான்?

கொழும்பு, ஏப்.24

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தகவலை தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ருஷான் மலிந்த வெளியிட்டுள்ளார்.

ஊழலுக்கு எதிரான அமைச்சர்கள் பலர் தமது கட்சியைச் சுற்றி திரளவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அரசியல்வாதிகளால் மன்னார் பின்னடைவு

## அமைச்சர் மனுஷ சாடல்

மன்னார், ஏப். 24

மன்னார் மாவட்டம் நாட்டுக்கு சர்வதேச நுழைவாயிலாக இருக்கின்றது. அபிவிருத்தி காணவேண்டிய இம் மாவட்டம் இங்குள்ள அரசியல்வாதிகளின் செயற்பாட்டால் பின்னடைவைக் கண்டு வருகின்றது என தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சால் வழங்கப்படும் அனைத்துச் சேவைகளும் அனைத்துக் கிராமங்கள் தோறும் உள்ள மக்களுக்கும் கிடைக்கப் பெறுவதற்கான நடமாடும் சேவை மன்னார் மாவட்டத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களில் நடைபெற்றன. முதல் நாளில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது-

மன்னார் இந்தியாவுக்கு மிகவும் அருகாமையில் இருக்கின்றபோதும் அன்று தொட்டு இன்று வரை இன்னும் தரை மார்க்கமாகச் செல்லும் போக்குவரத்து உருவாக்கப்படவில்லை. இருந்தும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வர்த்தக மற்றும் உறவுத் தொடர்புகள் இருந்தே வருகின்றன.

தலைமன்னாருக்கும் இந்தியாவுக்கும் உள்ள இடத்தை இராமர் பாலம் எனவும் இன்னும் சிலர் ஆதாம் இடம் எனவும் சொல்லுகின்றார்கள்.

இந்த மாவட்டம் இந்துக்கள் கிறிஸ்தவர்களைக் கொண்ட கலாசார மாவட்டமாகும். ஆனால் இங்கு இந்துக்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு வாழ்கின்றார்கள். உல்லாசப் பயணிகளைக் கவரும் ஓர் இடமாகவும் மன்னார் மாவட்டம் உருவாக இருக்கின்றது - என்றார். (ஒ-60)

# பதவி விலக தயாராகும் மைத்திரி?

கொழும்பு, ஏப்.24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விலகுவதற்குத் தயாராகி வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சி யாப்பின் பிரகாரம் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகும் தலைவர், கட்சியின் போஷகர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-இ)



# விஜயதாஸ ராஜபக்சவின் நியமனத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஏப்.24

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் சுதந்திரக்கட்சி மேலும் பிளவைச் சந்தித்துள்ளது.

விஜயதாஸ ராஜபக்சவின் நியமனத்தை சு.க.வின் உப தலைவரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலங்க சுமதிபால கடுமையாக விமர்சித்துள்ளார். அத்துடன், கொழும்பு மற்றும் அத்தனகல தொகுதி அமைப்பாளர்களும் இதற்குப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

விஜயதாஸ ராஜபக்ச தமது கட்சியில் உறுப்புரிமை பெற்றது தமக்குத் தெரியாது எனவும், தமது நலன்களுக்காக மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியை விற்பனை செய்யும் நிலைக்கு வந்துவிட்டார் எனவும் சுதந்திரக்கட்சி செயற்பாட்டாளர்கள் சிலர் விமர்சித்து வருகின்றனர். தற்போது விஜயதாஸ ராஜபக்சவின் நியமனத்தால் மற்றுமொரு அணியும் உதயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-44)

# மைத்திரி நகர்வால் சிக்கலில் விஜயதாஸ

கொழும்பு, ஏப்.24

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடலாம் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாரச்சி,

விஜயதாஸ ராஜபக்ச மொட்டுக் கட்சியில் அங்கத்துவம் பெற்றிருந்தார். எமது கட்சி ஊடாகவே நாடாளுமன்றம் தெரிவானார். தற்போது அமைச்சுப் பதவியை வகிக்கின்றார். ஒரு மாதத்துக்கு முன்னரே சுதந்திரக்கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றார் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

எமது கட்சி யாப்பின் பிரகாரம், கட்சி உறுப்பினர் ஒருவர் பிற கட்சியில் உறுப்புரிமை பெற்றால் எமது கட்சியில் இருந்து விலகியவராகக் கருதப்படுவார். எமது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுப் பதவியைப் பெற்றுவிட்டு, எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியொன்றில் பதில் தலைவர் பதவியை விஜயதாஸ பெற்றிருப்பது தவறு. இது தொடர்பில் ஆராய்ந்து எமது கட்சி முடிவெடுக்கும் - என்றார். (ஒ-44)

# அமைச்சுப் பதவியை துறக்கட்டும் விஜயதாஸ

## கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, ஏப்.24

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அமைச்சு பதவியை துறந்துவிட்டு, எதிரணி அரசியலை முன்னெடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திரக்கட்சியானது தேசியவாத மற்றும் தேசப்பற்றுள்ள கட்சியாகும்.

சந்திரிகாவின் கைகளுக்குள் கட்சி செல்லாமல் தேசியவாத சிந்தனை உடைய விஜயதாஸ ராஜபக்ச பதில் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சி.

சுதந்திரக்கட்சியை அரசு பறிமுதல் செய்துள்ளது என்ற நிலை மாற வேண்டுமெனில் விஜயதாஸ ராஜபக்ச அமைச்சு பதவியை துறந்துவிட்டு, எதிரணி அரசியலை முன்னெடுக்க முன்வரவேண்டும்- என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் உரிமைகளுக்கு சுதந்திரமற்ற இலங்கை!

## சர்வதேச அமைப்பான 'ஃப்ரீடம் ஹவுஸ்' சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.24

**ஊடக சுதந்திரம், விரும்பிய மதம் மற்றும் நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் என்பன இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகிறது.**

Freedom House

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் அரசசார்பற்ற அமைப்பான 'ஃப்ரீடம் ஹவுஸ்' தனது மதிப்பீட்டு அறிக்கையில் இதனை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில், அரசியல் உரிமைகளுக்கு 40 க்கு 22 புள்ளிகளும், சிவில் சுதந்திரத்துக்கு 60 க்கு 32 புள்ளிகளும் என நாட்டின் 'சுதந்திர நிலைவரத்துக்கு' மொத்தமாக 100 க்கு 54 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் அரசியல் உரிமைகள் மற்றும் சிவில் சுதந்திரம் ஆகிய இரு பிரதான விடயங்களின்கீழ் அடங்கும் முக்கியமான கூறுகளுக்கு மொத்தமாக 4 என்ற புள்ளிக் கட்டமைப்பின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் வலுவானவையாகவும் செயற்திறன் மிக்கவையாகவும் உள்ளனவா என்பதற்கு ஒரு புள்ளியும், அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் இயங்குகின்றதா என்பதற்கு 2 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன. கல்வித்துறையானது அரசியல் தலையீடுகள் அற்ற நிலையில் உள்ளதா என்பதற்கு 2 புள்ளிகளும், அச்சமின்றி தமது கருத்துகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் நபர்களுக்கு உள்ளதா என்பதற்கு 2 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)

# மேல் மாகாணத்தில் சைக்கிள் பொலிஸ் குழு

மேல் மாகாணத்தில் இடம்பெறும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட பொலிஸ் துவிச்சக்கரவண்டிக் குழுவொன்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலிருந்தும் நூற்றுக்கு அறுபது வீதமான பொலிஸ் அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச-இ)


# அ.அட்டைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஏப்.24

பிறப்புச்சான்றிதழ் இல்லாததால் இதுவரை தேசிய அடையாள அட்டை பெறமுடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, சான்றிதழைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் அடையாள அட்டைக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்துக்கான இறுதித் திகதி முன்னதாக கடந்த 31ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அது நீடிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் மரணம்



பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறிப் பயணித்த முச்சக்கர வண்டி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மொரகஹஹேன மிரிஸ்வத்த பிரதேசத்தில் மொரகஹஹேன ரயர் தொழிற்சாலைக்கு அருகில் இந்த துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்தவர்களை பொலிஸார் வழிமறித்தபோது அவர்கள் கைத்துப்பாக்கியால் பொலிஸார் மீது சூடு நடத்த முயற்சித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. உயிரிழந்தவர்கள் போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும், முச்சக்கர வண்டிக்குள் இருந்த இன்னுமொருவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# அரச நிறுவனங்களுக்கு கோப் குழு அழைப்பு!

ஸ்ரீ லங்கன் விமானசேவை நிறுவனம் உட்பட 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் இந்த வாரம் கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர் கல்வி உதவித்தொகை நிதியம் ஆகிய நிறுவனங்களின் தலைவர்களே அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கெஹலியவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.24

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 9 சந்தேகநபர்களையும் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீண்டும் அழைக்கப்பட்ட போதே மேலதிக கோரிக்கைக்கமைய நிராகரித்து மாளிகாகந்த நீதிவான் லோசினி அபேவிக்ரம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதினம் தெரியுமோ?

**செ**த்த பிறகும் நிம்மதியா இருக்க முடியாத நாடெண்டால் அது எங்கட நாடாத்தான் இருக்க முடியும். ஒருத்தர் செத்தபிறகு அவரின்ர 'பொடி' (சடலம்) அலைஞ்ச கதை முந்தநாள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில நடந்திருக்குது.

போன ஏப்ரல்மாசம் 3 ஆம் திகதி அக்சிடெண்டில ஒராளுக்கு கடும்காயம். கிட்டத்தட்ட ஆள் இயங்க முடியாத நிலை. அதால அவரை ஊர்காவற்றுறையில உள்ள ஆஸ்பத்திரியில வைச்சுப் பராமரிச்சு வந்தவை. அங்க இருக்கேக்க ஆளுக்கு நிமோனியாவாக்கி , நிலைமை மோசமாகிட்டுது. அதால உடனடியா ஆளை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டந்திருக்கினம். அங்க வந்தும் பிரியோசனமில்லாமல், ஆள் செத்துப்போச்சு.

அதுக்குப் பிறகுதான் குளறுபடி தொடங்கியிருக்கு. அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டொக்டர், மேலோட்டமாப் பாத்தாரோ என்னவோ அக்சிடெண்ட் விசயத்தை கவனத்தில எடுக்காமல் 'நிமோனியாவால இறப்பு' எண்டு கேஸை முடிச்சு, பொடியை வீட்ட கொண்டுபோக பெர்மிஷன் குடுத்திட்டார். வீட்டுக்காரரும் காரைநகரில இருக்கிற வீட்டுக்கு பொடியைக் கொண்டுபோய், செத்தவீட்டுக்கான வேலையளைப் பாத்திருக்கினம்.

அந்த நேரத்தில ஆரோ மானிப்பாய் பொலிஸூக்கு போன்பண்ணி, இப்பிடி அக்சிடெண்டில செத்தவரின்ர பொடியை போஸ்ட்மோட்டம் செய்யாமல் கொண்டு போட்டினம் எண்டு போட்டுக் குடுத்திருக்கினம். அதுக்குப் பிறகு மானிப்பாய் பொலிஸ்காரர் ஆஸ்பத்திரியில போன் அடிச்சு விசயம் உண்மையோ எண்டு கேட்டிட்டு, காரைநகருக்குப் பறந்துபோய், செத்தவரின்ர பொடியை திரும்ப பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவரச் சொல்லி இருக்கினமாம்.

பிறகு அந்த செத்தவரின்ர பொடியை பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோய், போஸ்ட்மோட்டம் எல்லாம் முடிச்சு கனநேர அலைச்சலுக்குப் பிறகுதான் வீட்டை கொண்டந்து சேர்த்தவையாம். வழக்கமா ஆஸ்பத்திரியில நோர்மல் வருத்தங்களால சாகிறவையின்ர பொடியை போஸ்ட்மோட்டம் செய்யாமல் மனிதாபிமான அடிப்படையில வீட்டுக்காரரிட்டக் குடுக்கிறவையாம்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அப்பிடியெல்லாம் செய்யாமல் , எல்லாத்தையும் சட்டப்படி செய்த பிறகுதான் பொடியைக் குடுக்கோணும் எண்டு இறுக்கமா உத்தரவு போடுப்பட்டிருக்காம்.

-பட்சி

padsi@uthayan.com

# குரோதி : புதுவருடப் பலன்கள்






ஏர்முனையாக இருந்தாலும், போர் முனையாக இருந்தாலும் எதிலும் முதலில் நிற்பவர்களே! உங்கள் ராசிக்கு பதினோராவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சோம்பல் நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். சுருங்கிய முகம் மலரும். கடந்த வருடத்தில் வாட்டிவதைத்தப் பிரச்சினைகளுக்கு இந்த வருடத்தில் தீர்வு கிடைக்கும்.

சித்திரை, வைகாசி, ஆடி மாதங்களில் உங்களின் அடிப்படை வசதிகள் பெருகும். பிரபலங்களின் நட்பும் கிட்டும். ப

ராசிநாதன் சூரியனும், ஜீவனாதிபதி சுக்ரனும் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால் அரசால் அனுகூலம் உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். 30.04.2024 வரை உங்கள் ராசிக்கு குருபகவான் 9ல் நிற்பதால் பிரச்சினைகளை தொலைநோக்குப் பார்வையுடன் தீர்க்கும் சூட்சுமத்தை உணர்வீர்கள்.

உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். மகன், தாயாருக்கு இருந்த நோய் வெகுவாக குறையும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள்.

01.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு 10ம் வீட்டில் நுழைவதால் சில நேரங்களில் ஏமாற்றங்களை உணர்வீர்கள். சட்டத்துக்கு புறம்பான வகையில் செயல்படுபவர்களுடன் எந்த நட்பும் வேண்டாம். தர்ம சங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவீர்கள். உங்கள் திறமையையும், உழைப்பையும் வேறு சிலர் பயன்படுத்தி முன்னேறு வார்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.

இந்த வருடம் முழுக்க சனி உங்கள் ராசிக்கு 7ல் அமர்ந்து கண்டகச் சனியாக தொடர்வதால் முன்கோபம் அதிகமாகும். இந்தாண்டு முழுக்க ராகு 8, கேது 2ம் இடத்திலும் நீடிப்பதால் இடம், பொருள், ஏவலறிந்து செயல்படப்பாருங்கள்.

வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்துக் கொண்டேயிருக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகமாகும். இந்த தமிழ் புத்தாண்டு முற்பகுதியில் சின்ன சின்ன முடக்கங்களையும், சங்கடங்களையும் தந்தாலும், மையப்பகுதியில் வருங்காலத் திட்டங்களை ஓரளவு நிறைவேற்றித் தருவதாக அமையும்.



# தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை

கொழும்பு, ஏப்.24

யாழ். தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நான்காவது நினைவுப் பேருரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

அருட்தந்தை கலாநிதி அமிர்தயெயசேகரம் அடிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நெறிப்படுத்தினார். நிகழ்வில் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன், 'தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் கல்விப் பணிகள்' என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தொடக்கவுரை ஆற்ற, நெடுந்தீவு பிரதேச கலாசார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலன் ஆய்வுரையாளரை அறிமுகம் செய்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி ஆய்வுரை ஆற்றிய பேராசிரியர் கு.சின்னப்பனுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

மண்கும்பான் வெண்புரவி கலைஞர்களின் கும்மி நடனம் நிகழ்வில் சிறப்புற்றது. அருட்தந்தையர்கள், கல்வி ஆர்வலர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச)

# மானிப்பாய் இந்து பூப்பந்தில் முதலிடம்



யாழ்ப்பாணம், ஏப்.24

வலிகாமம் கல்வி வலயமட்ட பெரு விளையாட்டுகள் வரிசையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற பூப்பந்தாட்டப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலிடத்தைப் பெற்று சம்பியனைத் தனதாக்கியது.

இரண்டாம் இடத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மூன்றாம் இடத்தை சதுமலை சின்மயபாரதி வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (ச-555)

# சாவ. லிகோரியார் தேவாலயத்தில் மடுமாதா



யாழ். குடாநாட்டில் பவனிவரும் மடுமாதாவின் பவனி நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள சாவகச்சேரி பங்கு லிகோரியார் தேவாலயத்தை வந்தடைந்தது.

ஏ-9 வீதியூடாக சாவகச்சேரி நகரை அடைந்த மடுமாதா பவனி கச்சாய் வீதியை அடைந்தபோது இருமருங்கிலும் பக்தர்கள் குழுமி அன்னைக்கு மலர்தூவி பெருவரவேற்பளித்தனர். தொடர்ந்து லிகோரியார் தேவாலயத்தில் மடுமாதாவுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-131)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். முருகப் பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையு டன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள். கடன் தொகை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். பணிச்சுமை அதிகரித்தாலும் சோர்ந்து விடாமல் செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம் :** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். செலவுகளால் கையிருப்பு குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும்.


**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக இருக்கவும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுற்றுலா வலயமாக சிகிரியா- தம்புள்ள

கொழும்பு, ஏப். 24

சிகிரியா - தம்புள்ளவை சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் ஆரம்பப் பணிகளை இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டு முடிவதற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்துக்காக 30 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

(ச-இ)


## பெயர் மாற்றம்

சிவனையா சிவனம்மாள் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சிவா சிவராணி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சிவா சிவராணி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.


சிவா சிவராணி

(CS 28261) A-1


## மரண அறிவித்தல்

மலர்வு 09 . 09 . 1931

உதிர்வு 23 . 04 . 2024



### அமரர் யோகேஸ்வரி இராமச்சந்திரன்

ஊர்காவற்றுறையினை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி இராமச்சந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர்), நேற்று (2024.04.23) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணன்-தங்கநாச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமச்சந்திரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற நடராசாவின் சகோதரியும், காலஞ்சென்ற பாலச்சந்திரனின் மைத்துனியும் காலஞ்சென்ற சந்திரரூபன், மற்றும் சந்திரமாலா (ஓய்வு பெற்ற கணக்காளர்), சந்திரவதனி, சந்திரகிருஷ்ணன், சந்திரபாலிகை, சந்திரகோபன் (மக்கள் வங்கி சங்கானை), சந்திரபாமா (எழுதுவினைஞர், இலங்கை மின்சார சபை, வவுனியா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாவதி (லண்டன்), ஜெயராசா (பொது முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம் ஊர்காவற்றுறை), காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் கஜேந்திரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), வசந்தி (ஆசிரியர் யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கமல்ராஜ், சர்வேஸ்வரன், சந்திரராஜன், தனுசியா, சக்திதாசன், அச்சுதன், பிரகலாதன், ரகீஷா ஆகியோரின் பேர்த்தியும், தோகை, பிரபஞ்சன், ரகீஸ்னா, டக்சயன், தியொக்சன், யதுர்த்திகா, அருணன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2024.04.24) புதன்கிழமை இல 19/15, அன்னசத்திர லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணத்திலுள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
இ.சந்திரகோபன் (மகன்)
077 684 8334

(CS 320) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 08 . 1934

மறைவு 23 . 04 . 2024



### முத்துத்தம்பி செல்வரட்ணம்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி செல்வரட்ணம் நேற்று (23.04.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா-பவளம்மா தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் இரட்ணசிறி (மகிந்தன்), சுகந்தன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, புண்ணியமூர்த்தி, சரஸ்வதி மற்றும் இராசரத்தினம், நவரத்தினம், ஜெயரட்ணம், புஸ்பராணி (France) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும், பரமேஸ்வரி (நோர்வே), சிவபுந்தரசன் ஆகியோரின் மைத்துனரும் மல்லிகா, சிவரஞ்சினி ஆகியோரின் மாமனாரும் நிலானி (Colombo), நிலக்ஷன் (Colombo), பர்மினி (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), சுகன்யன் (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), திவ்யா, ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.04.2024) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று வேம்பன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
இரட்ணசிறி (மகிந்தன்)
077 424 8807


உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(CS 54811) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1930

மறைவு 20 . 04 . 2024



### தில்லையம்பலம் இராசையா (துரைராசா)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் இராசையா (துரைராசா) (20.04.2024) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம்-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, விசயராணி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச்சகோதரரும் சிவகுமார் (முன்னாள் கொமர்ஷல் வங்கி ஊழியர்), செல்வகுமார் (அமரர்), ஜெயக்குமார் (ஜேர்மன்), தயாபரன் (ஜேர்மன்), தசிபரன் (அமரர்), இராஜேஸ்பரன் (கனடா), அருள்பரன் (இலங்கை), ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தினி, ஜெயக்கலா, நகுலேஸ்வரி, ஆன்மரினா, துஷ்யந்தினி (வளவாளர் தேசிய கல்வி நிறுவனம், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரிகா (வைத்தியர்), தீவிகன் (Eng), திவசாந் (Eng), உமாகரன் (சட்டத்தரணி), ஆன்றிமேஸ் (கனடா), மெலிசா (Eng ஜேர்மன்), ஷாகித்யகருமாரி (கலாவித்தகர் லண்டன்), வாகீஸ்பரன் (BMS), ஜஸ்ரின், துஷாரா, ரூபினா, துபிசன், அன்சன், பௌலினா, கபிஷா, கௌசி (வைத்தியர்), சிந்துஜா, நிசாந்திக்கா, அனோபன் (லண்டன்), சாமந்தி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு பேரனும் றியன், யாஸ், அஜீஸ், டெவின், ஆதிரையன், பராந்தகன், ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 247 3201

(CS 321) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. அரசாங்கத்தின் குடிவரவுச் சட்டங்களால் குடியேற்றவாசிகள் அச்சம்

சிட்னி, ஏப். 24

**அவுஸ்திரேலிய அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய குடிவரவுச் சட்டத்தை யிட்டு இலங்கையர்கள் உட்பட வெளிநாட்டு குடியேற்றவாசிகள் அச்ச மடைந்துள்ளனர்.**

புதிய சட்டத்தின்படி அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இதற்கு முன்னரும் அவுஸ்திரேலியாவில் இவ்வாறான இறுக்கமான நடைமுறை பின்பற்றப்பட்டாலும் இம்முறை கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் குடியேற்றவாசிகளுக்கு இருக்கும் மேன்முறையீட்டு வாய்ப்புகளைப் புறக்கணிப்பதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருப்பியனுப்பப்படும் பட்சத்தில், அவர்கள் தமது நாட்டுக்குத் திரும்பிச்செல்ல மறுக்கும்பட்சத்தில் அவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படும் என அவுஸ்திரேலிய செனட்சபையும்தீர்மானவரைவைக் கொண்டுவந்துள்ளது.

சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைப்பதற்கு இந்தப் புதிய வரைவு சட்டமாவது அவசியம் என குடிவரவு அமைச்சர் அண்ட்றூ கில்ஸ் தெரிவித்துள்ளார். இந்தச் சட்டம் இன்னமும் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.

அவுஸ்திரேலிய செனட் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகிறது என மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தச் சட்டத்துக்கு அவுஸ்திரேலியாவிலுள்ள ஈரானிய, சூடானிய, குர்திஷ், சிம்பாப்வே அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளமையும்குறிப்பிடத்தக்கது. (ம-6)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத்தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்

**077 334 1281**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல ஹோட்டல் & ரெஸ்டோரன்ட் ஒன்றிற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* சமையல் உதவியாளர்
* வெயிட்டர்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பயிலுநர்களும் உள்வாங்கப்படுவார்கள்.

தொடர்புகளுக்கு:

**075 4100 329, 077 834 8336**

(CS 54805) A-1


## திறந்த அறிவித்தல்

### வட - கிழக்கு மக்கள் நலன் காப்பகத்தின் அங்கத்தவர்களுக்கு சிறப்பு பொதுக் கூட்டத்திற்கான அழைப்பு

மேற்படி சிறப்புப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 04.05.2024 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 02 மணிக்கு, முல்லைத்தீவு பொது நோக்கு மண்டபத்தில் நடாத்தப்பட உள்ளது எமது அங்கத்துவம் பெற்றவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், இக் கூட்டம் தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் மே மாதம் (01.05.2024) 01 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன் தெரியப்படுத்துமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

இடம் : பொது நோக்கு மண்டபம், முல்லைத்தீவு
திகதி : 04.05.2024
நேரம் : பி.ப.02.00மணிக்கு
ஆட்சேபனைகள் : 222வது மைல்கல், நடுவப்பியகம், A9வீதி, மாங்குளம்.

நன்றி.

சபாபதி கந்தசாமி
இயக்குநர் - வட-கிழக்கு மக்கள் நலன் காப்பகம்.

# கிளிநொச்சிக்கு இலவச அரிசி

கொழும்பு, ஏப்.24

நாடளாவியரீதியில் குறைந்த வருமானம் கொண்டகுடும்பங்களுக்குத்தலா10கிலோ இலவச அரிசி வழங்கும் தேசிய வேலைத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-113)



## மஹோற்சவம்

வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும். மஹோற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை 6.30 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 பழைய பூங்கா வீதி. ஆதன இல 81. என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி வி.என். ஜோன்பிள்ளை என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு 20.01.2010 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.சபேசன் முகதாவில் 2338ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் சிமியோன் யேசுதாசன் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் காலஞ்சென்ற எனது பிதா சிமியோன் பெயரில் அறுதியுறுதி முடிந்ததென்றும் கடந்தகால வன்செயல்களின் போது குறித்த உறுதி தொலைந்து விட்டதென்றும். யாழ்ப்பாணம் காணிக்கந்தோரில் தேடுதல் செய்தும் மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றும். எனக்கு வந்தடைந்த பிதாவழி முதுசமும் ஆட்சியுமுடையதென்றும் இவ்வாதனம் என்னாலும் எனது முன்னோர்களாலும் கடந்த 80 வருடங்களுக்கு மேலாக சொந்தமும். நிந்தமும் தடையற்றதுமான ஆட்சியிலிருந்து வந்ததென்றும்.வேறு யாதேனும் விதமாக பாரிக்கப்பட்டோ அல்லது பாராதீனப்படுத்தப்பட்டோ இருக்கவில்லையென்றும். வெளிப்படுத்தல் உறுதி முடிப்பதற்கு எனக்கு போதிய உரித்தும் தத்துவமும் உண்டென்றும் இதனால் வெளிப்படுத்துகிறேன். என வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்.

குறித்த ஆதனத்தை சிமியோன் யேசுதாசன் உம் பெண் லில்லி மொனிக்காவும் 28.06.2010ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு" கே. கேசவன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11729ம் இலக்க சீதன உறுதிமூலம் அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினா விற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று கண்டுக்குளி இறை ""மாவிலங்கை வயல் நிலப்பரப்பு இரண்டு குளி ஆறுதசம் மூன்று ஏழும் (நி.ப 02.குளி 06.37) இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு.ஆர் இரத்தினராஜா அவர்களால்03.05.1998 ல் அளந்து வரையப்பட்ட 484ம் இலக்க படத்தில் சுட்டிய 1ம் இலக்க துண்டு. வீடும். கிணறும். செய்பயிர் வான்பயிர்களும்.

இதற்கெல்லைகள்.
கிழக்கு :- பழைய பூங்கா வீதி
வடக்கு :- வ. சின்னத்தம்பியின் ஆதனம்.
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- ம.யேக்கப்பின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

# இருபத்தோராம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில்
20 . 05 . 1927



ஆண்டவர் பாதம்
24 . 04 . 2003

## அமரர் தொம்மை பிலிப்பு
### (அண்ணாவியார்)

அன்புடன் பண்பு சேர்த்து எமை வளர்த்து
அவனியில் நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டி
அரிய பல அறிவுரைகள் நிதம் கூறி
எளிமையாய் வாழ்வதன் பொருளுணர்த்தி
ஏற்றமுடன் நாம் வாழ வழி வகுத்த எம் அன்புத் தந்தையை
நன்றி உணர்வுடன் நினைவிற் கொள்கின்றோம் இந்நாளில்
நின் ஆன்மா ஆண்டவரில் அமைதி பெற்று
விண்ணக இன்பத்தில் மகிழ்ந்திருக்க
இறையருள் வேண்டுகின்றோம்.

[illegible] வீதி,
கொடிகாமம்.

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(CS/54804) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெளியேற்றங்களும்ஆபத்துகளும்

நாட்டில் காணப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக கடந்த இரு ஆண்டுகளில் 25 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் 24 வீதமானோர் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குப் பயணமாகியுள்ள நிலையில், ஏனையோர் வேறு நோக்கங்களுடன் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றனர் என்று இலங்கை மத்திய வங்கி கூறியிருக்கின்றது. இவற்றுக்கு மேலதிகமாக சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு இலங்கையை பல்வேறு நெருக்கடிகளுக்குள் தள்ளியிருக்கின்றது. அந்த நெருக்கடிகளின் தாக்கங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நாட்டு மக்களுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு தீர்வுகளை முன்வைப்பது எந்தளவு அவசியமோ, இந்தப் பொருளாதார நெருக்கடியால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்க முயல்வதும் மிக முக்கியமானது.

பொருளாதார நெருக்கடியின் பின்னர் வாழ்க்கைச் செலவு உயர்வு, வரிகள் அதிகரிப்பு, வேலையில்லாப் பிரச்சினை என நாட்டின் சாதாரண மக்கள் முதல் பல தட்டு மக்களும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இந்தச் சிக்கல்களால் அவர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வதோடு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் நாட ஆரம்பித்திருக்கின்றனர். அதிகளவான மக்கள் குறுகிய காலத்தில் நாட்டைவிட்டு வெளியேற முற்படுவது நாட்டின் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளை நிச்சயம் எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்.

நாட்டின் சுகாதாரத்துறை, கல்வித்துறை உட்பட பல பிரதான துறைகளில் இந்தப் பிரச்சினை தற்போது தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றது. சுகாதார அமைச்சின் அண்மைய தரவின்படி, தமிழ்-சிங்களப் புத்தாண்டு விடுமுறை வாரத்தில் மட்டும் விசேட மருத்துவர்கள் ஏழுபேர் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அண்மைய மாதங்களில் 350க்கும் அதிகமான மருத்துவர்கள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதனால் பல அரச மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சைகள் காலவரையறையின்றி ஒத்திவைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நாட்டின் ஏனைய துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையால் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின் தாக்கங்களும் எதிர்காலத்தில் மெல்ல மெல்ல பகிரங்கமாகும். நாட்டில் இருந்து கல்வியியலாளர்களும், நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் வெளியேறுவதால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவது மிகச்சவாலான விடயமாகவே இருக்கும்.

ஆட்சியில் உள்ள அரசாங்கங்கள் இவ்வாறான பிரச்சினைகளில் கவனம் செலுத்தாது செயற்படுமாயின்-எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடிகளுக்கு அப்பால் நாடு பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தற்போதே திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். நாட்டில் இருந்து தப்பிச்செல்லும் போக்கு குறைக்கப்படாவிட்டால் ஏனையவற்றுக்கு இலங்கை பிறநாடுகளிடம் கையேந்துவதைப்போன்று துறைசார் மூளைசாலிகளுக்கும் இலங்கை பிறநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய ஆபத்தான நிலைமை ஏற்படக் கூடும்.




# 2026 ஆம் ஆண்டில் வறுமை வீதம் உயரும்

### உலகவங்கி எதிர்வுகூறல்




**கொழும்பு, ஏப்.24**

**2026ஆம் ஆண்டு இலங்கையின் வறுமை வீதம் 22 சதவீதத்தை விட அதிகரிக்கும் என்று உலக வங்கி எதிர்வு கூறியுள்ளது.**

உலகவங்கி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான பொருளாதாரவீழ்ச்சியின் பின்னர் இலங்கை அதிகளவிலான வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மையை எதிர்கொள்கின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வறுமைவீதம் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக அதிகரித்துள்ளது என்றும், 2026ஆம் ஆண்டு வறுமை வீதம் 22 சதவீதத்தை விட அதிகரிக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பாக்குநீரிணையை நீந்தி கடக்க முயன்றவர் மரணம்

பாக்குநீரிணையை நீந்திக் கடக்க முயன்ற இந்தியர் ஒருவர் நடுக்கடலில் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்த கோபால் ராவ் (வயது-78) என்பவரே உயிரிழந்தவராவார். 31 பேர் கொண்ட குழு பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியை நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.10 மணியளவில் ஆரம்பித்தது. நீச்சலை ஆரம்பித்த கோபால் ராவ் அதிகாலை 3 மணியளவில் கடலில் நெஞ்சு வலி ஏற்பட்டு நினைவிழந்தார். அவரைப் பரிசோதித்த மருத்துவக் குழு அவர் உயிரிழந்தமையை உறுதிப்படுத்தியுள்ளது. (எ-இ)

## ரயில் கேபிள்கள் திருட்டு

ஹிக்கடுவை புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான மின்சாரக் கேபிள்கள் திருடப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து வந்து ஹிக்கடுவை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மின்சாரக் கேபிள்கள் திருடப்பட்டுள்ளன. ரயில் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்களாலேயே, இந்தக் கேபிள்கள் எடுத்துச்செல்லப்பட்டிருக்க வேண்டுமென ரயில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-6)

## ரயில்வே திணைக்களத்தின் முகாமையாளர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.24

ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ பண்டார நேற்றுக் காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், இவர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

## 720 பெண்கள் கைது



நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 720 பெண்களும், 13 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

### நாளை

**25.04.2024**

**வியாழக்கிழமை**

**சித்திரை - 12**

சுபநேரம் : 07.30 - 09.00

ராகுகாலம் : 01.30 - 03.00

### நாளொரு நல்வார்த்தை

**இரு கை கூப்பி**
**கடவுளை வணங்குவதைவிட**
**ஒரு கைநீட்டி உதவி செய்**
**இரு கைகளும் உன்னை வணங்கும்**
**கடவுளாக.**

**-அன்னை தெரேசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளிபாதமலை யாத்திரை மே 10 ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையுடன் இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியம் இணைந்து நடத்தும், நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து சிவனொளிபாதமலை நோக்கிய புனித திருத்தலத் தரிசன யாத்திரை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

பங்குபற்ற விரும்புவோர் 0779236552 எனும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு தரிசன யாத்திரையின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)

## நீதிபதி...


பதி எம். இளஞ்செழியன் செயற்பட்ட காலப் பகுதியில் அவர் பயணித்த வாகனத்தை நோக்கி 2017ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் திகதி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. தாக்குதலில், நீதிபதியின் பாதுகாப்புப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொரு உத்தியோகத்தர் படுகாயமடைந்தார். இந்த வழக்கில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார். வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவந்தன.

இந்த வழக்கிலேயே நீதிபதி இளஞ்செழியனின் சாட்சியம் இன்றையதினம் பெறப்படவுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிமன்றாதிபதி நாகரட்ணம் நிசாந்த சாட்சியை நெறிப்படுத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம-26)

## எவருமற்ற...

வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1946

மறைவு 22 . 04 . 2024

### பொன்னம்பலம் சண்முகரத்தினம்

**(ஓய்வு பெற்ற வைத்தியர், சமாதான நீதவான்)**

பூநகரி சித்தங்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், இல 31, வளாக வீதி திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சண்முகரத்தினம் நேற்று முன்தினம் (22.04.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற வைத்தியர்) - இராசம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஆனந் (கொலண்ட்), பிறேமானந்தி (அதிபர், லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி), வத்சலா (லண்டன், முன்னாள் ஆசிரியை யா/செங்குந்தா இந்துக் கல்லூரி), நிமலநேசன் (ஆசிரியர் வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தரா, அமரசேகர், சிவரூபன், நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாரதி, அபிராமி, செந்தூர், இனியவன், தாரணி, சாய்சரண், சாய்சங்கவி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஸ்ரீகந்தராசா, கதிரநாயகி, காந்தராணி, முருகவேள் காலஞ்சென்றவர்களான குகதாசன், முருகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 356 8725

இல. 31 வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CR/54808) J-1

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் இராஜேந்திரம்

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் 8ஆம் கட்டை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜேந்திரம் கடந்த (22.04.2024) திங்கட்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கரத்தினம் (லண்டன்) தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சபாரத்தினம் (Retd. supreme court Interpreter mudaliyar) சுந்தரேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பிரேமாதேவியின் அன்புக் கணவரும், சுஜீவன் (லண்டன்), சுஜந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைடூரிகாவின் (கனடா) அன்பு மாமனாரும், ராஜேஸ்வரி - ஜெகதீசன், ராஜநாயகி - திருவாதவூரன், ராஜினி - செந்தில்நாதன், ராஜிதன் - கிருபா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரூபினி, சுகந்தினி, ரஜீவ், லலித்ரூபன், யதீஸ்ரூபன், கோகுலரூபன், அர்ஜூன், செந்தூரி ஆகியோரின் பாசமிகு மாமாவும், ராகவி, அஜந் ஆகியோரின் அன்பு பெரியதந்தையும், மல்லாகத்தைச் சேர்ந்த உஷாதேவி - நாகராஜா, சௌமியாதேவி - விசுவலிங்கம், சதானந்தன் - ஞானகௌரி, சண்முகானந்தன் - கல்யாணி (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2024) புதன்கிழமை கொழும்பு பொரளை ஜெயரத்தின மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**T.P: 011 255 2509**
கொழும்பு - 4

தகவல்:
மனைவி, மக்கள்,
மாணிக்கவாசகர் சுகிர்தன்.

' ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக '

## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 11 . 1954

இறப்பு 22 . 04 . 2024

### கணேசராஜா J.P (பத்தர்)

யாழ். வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை கணேசராஜா (முன்னாள் மாநகர சபை உறுப்பினர்) அவர்கள் கடந்த (22.04.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இராசரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நவராணி அவர்களின் ஆருயிர் கணவரும், மயூரன் (பிரான்ஸ்), ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹரிகரனின் (லண்டன்) பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற கொலின் தேவராசா - ஆரியமாலா தம்பதியரின் சம்பந்தியும், ரிஸ்விதா (லண்டன்), ஷஷிஜா (லண்டன்), ஜஷிகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, தவராசா, ஜெயராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வரதராசா, இரவீந்திரன், தயாநிதி, குமுதினி, நவநீதன், நவசக்தி, நவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.04.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இல. 82/2B, சிவப்பிரகாசம் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புக்கு:
ராஜினி (மகள்) 076 0012106 (இலங்கை)
மயூரன் (மகன்) 0033758491683 (பிரான்ஸ்)
ஹரிகரன் (மருமகன்) +447588467744 (வட்சப்-லண்டன்)
+447456710501 (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மன் உடுத்திய சேலை ரூ.16 இலட்சத்துக்கு ஏலம்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம், புங்குடுதீவு கண்ணகை அம்மனுக்கு உடுத்தப்பட்ட சேலை 16 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றபோதே அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் ஏலத்தில் அதனை வாங்கினார். (ச-555,27)




## வவுனியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஏப்.24

வவுனியா பட்டானிச்சூரில் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பட்டானிச்சூர்பாடசாலையைஅண்மித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹைஏஸ், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின. விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். (ஒ-110)

## தேருக்கு மலர் தூவியவர் தவறிவிழுந்து காயம்

புங்குடுதீவு, ஏப். 24

தேர் உலா வந்தபோது உயரத்திலிருந்து மலர் தூவியவர் தவறிவீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் புங்குடுதீவு கண்ணகை அம்பாள் கோவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த திலீப்குமார் (வயது-39) என்பவர் காயமடைந்த நிலையில் புங்குடுதீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-9)

## நிர்வாகசபைக் கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம், யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ப-66)

# காலநிலைசார் சவால்கள் திண்டாடுகிறது இலங்கை

### உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.24

இலங்கை தற்போது காலநிலைசார் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. அதிகரித்துவரும் வெப்பநிலையும், மிகையான உஷ்ணமும் மக்களின் உடல் ஆரோக்கியத்துக்கும், வாழ்க்கைத்தரத்துக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

-இவ்வாறு இலங்கையின் நிலைவரம் குறித்த மாதாந்த மதிப்பீட்டு அறிக்கையில் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை முகங்கொடுத்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்போது படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றது.

2022 ஆம் ஆண்டில் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் சுமார் 6.2 மில்லியன் பேர் காணப்பட்ட நிலையில் 2023 ஒக்ரோபரில் 24 சதவீதமான குடும்பங்கள் மிதமான உணவுப்பாதுகாப்பின்மை நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நிலைவரம் படிப்படியான முன்னேற்றத்தைப் பதிவுசெய்துவரும் வேளையில் தற்போது இலங்கை காலநிலை சார்ந்த சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றது.

அதிகரித்துவரும் வெப்பநிலையும், மிகையான உஷ்ணமும் மனிதர்களின் உடல் ஆரோக்கியத்துக்கும், வாழ்க்கைத்தரத்துக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன் விவசாயத்துறை மீதும் அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தொழிற்சாலைகளில் திடீர்ப் பரிசோதனை

கிளிநொச்சி, ஏப். 24

பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் உள்ள கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுத்தலில் ஈடுபடும் தொழிற்சாலைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திடீர்ச் சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் அந்தப் பகுதியில் இயங்கிவரும் ஆறு தொழிற்சாலைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடற் சுகாதாரக் கண்காணிப்புப் பரிசோனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது சுகாதார நடைமுறைகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு குறித்தும் அறிவுறுத்தப்பட்டன. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப் புத்தாக்கம்; 25 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஏப். 24

இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் விவசாய புத்தாக்க வேலைத் திட்டத்துக்காக 25 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. 200 பிரதேச செயலர் பிரிவுகளில் குறைந்தது 200 கிராமங்கள் இளைஞர் விவசாயத் தொழில் முயற்சி கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படும். ட்ரோன் தொழில்நுட்பத்தை வழங்குதல், நெற்பயிர்ச்செய்கைக்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், நீர்ப்பாசனத்துக்குத் தெளிப்பு நீர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், அதிக விளைச்சல் தரும் விதைகளை நடுதல் போன்ற பல திட்டங்களை இதன்கீழ் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1953



மறைவு 22 . 04 . 2024

### தேவகி ஆலாலசுந்தரம்

(மட்டுவில் வடக்கு, அம்மன் கோவிலடி - சாவகச்சேரி)

யாழ். மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவகி ஆலாலசுந்தரம் கடந்த திங்கட்கிழமை (22.04.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஆலாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், செல்வினி, செந்தூரன், பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜ், பிரவீணா, கார்த்திக் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதுஷன், தனுஷன், ஆரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற யோகநாதன், காலஞ்சென்ற கதிர்காமநாதன், மற்றும் புனிதவதி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் விமலாதேவி, சண்முகசுந்தரம், சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.04.2024) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் வடக்கு - ஊரிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
075 940 0481

(CR 42272) J-1

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை தவமணி

ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தவமணி நேற்று (23.04.2024) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், பத்மநாதன், ஜெகநாதன் (ஓய்வு பெற்ற CEB ஊழியர்), நீலாம்பிகை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவகுமார் (UNICEF), காலஞ்சென்ற புஸ்பரஞ்சினி மற்றும் ஜெயக்குமார் (ஆசிரியர்-இராமநாதன் கல்லூரி), ஜெயகௌரி (ஆசிரியர்- கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலை), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சுகந்தினி (Swiss), ராஜினி (USA) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வரஞ்சிதம், ஆனந்தபாஸ்கரன் (ஓய்வு பெற்ற பரிசாரகர்), கௌரி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், காரைநகர்), முகுந்தன் (யா/மாநகர சபை நீர் வேலைப்பகுதி), நாகலோசன் (Swiss), குகபாலா (USA), ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன் (Canada), நிஷாந்தி (Jesus calls), அனோஜன், அபிநயன், ஷாத்ராக், மேஷாக் (SJC), ஏஞ்சலின் (CGC), பிறிசில்லா ஜெனிபர் (Jaffna Hindu Primary), ஆகாஸ், (Swiss), ஆர்த்திகா (Swiss), லக்ஷனியா (USA) ஆகியோரின் பேர்த்தியும், செரின் பெனிக்ரா (Jaffna Hindu Primary), சாம் பெனிகின் (Jaffna Hindu Primary), அலேஜா (Canada) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

242/4 மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 691 1051
077 662 3586

(CS/54813) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 03 . 1948



இறப்பு 22 . 04 . 2024

### மயில்வாகனம் கிருஸ்ணமூர்த்தி (கிட்டு)

(ஓய்வு பெற்ற காவலாளி)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கிருஸ்ணமூர்த்தி நேற்று முன்தினம் (22.04.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும், மனோன்மணி (சறோ) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரிமலேஸ்வரி, கருணாமூர்த்தி மற்றும் வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தீபா (பிரதேச செயலகம் தென்மராட்சி), ரஜீவன் (பொலிஸ் உத்தியோகத்தர் தெல்லிப்பளை) ஆகியோரின் தந்தையும், கேதீஸ்வரன் (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), தட்சாஜினி ஆகியோரின் மாமனாரும், திலக்சன், சர்மி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.04.2024) இன்று காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 948 9824
077 303 8837

(CS/54821) J-1

## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 12 . 12 . 1948



இறைவன் அடியில் 23 . 04 . 2024

### கணபதிப்பிள்ளை சரவணபவன்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்
வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி)

யாழ். சாவகச்சேரி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரவணபவன் நேற்று (23.04.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நளாயினி (கலைமகள் பாலர் பாடசாலை ஓய்வு நிலை ஆசிரியை - மட்டுவில் தெற்கு) அவர்களின் அன்புக் கணவரும், சியாமளா, கமலினி, பாமினி , சங்கர், மகிழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமுருகன், செந்தூரன், பிரதீபன் (ஆரணி பதிப்பகம்), கௌஷ்லியா, ஜெனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கெஷான், அஜீஸ், அவனீஸ், ரிசாளினி, பிரதீஷ், விஸ்வஜித் ஆகியோரின் அன்புப் பேரனும், கணேஷமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சிவகாமசௌந்தரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சௌந்தரநாயகி, செந்திமலர், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் (K.S.K. Motors), சுந்தரலிங்கம், செந்தில்மணி (முன்னாள் பிரதி அதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2024 இன்று பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தாப்பிடி வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 673 8284
076 611 9028

(CS/54807) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.04.2024
புதன்கிழமை

புதன் பொய்கை

அறிவின் சொற்களில் வெளிப்படுத்தாத உணர்வுகள், என்றென்றும் மறக்க முடியாதவை.

*தார்க்கோவ்ஸ்கி*







# தமிழர்களின் தொன்மமான திருக்கரசையம்பதி

**அ.பெ.ஜெனிபர்**
*4 ஆம் ஆண்டு மாணவன்*
*சட்டத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஈழ மணித்திருநாட்டின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் கங்குவேலிக் கிராமத்தில் மகாவலிகங்கைக்கு அருகாமையில் அகத்தியர் தாபனம் என்று அழைக்கப்படுமிடத்தில் வனம் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது திருக்கரசையம்பதி.

இப்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் ஆலயம் குறித்த வரலாற்றைக்கூறும் தலபுராணமே திருக்கரசைப் புராணம். யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் எழுந்த இவ்விலக்கியத்தை இயற்றிய புலவரை அறியுமாறில்லை எனினும் குருவணக்கம், புராணவரலாறு எனும் பகுதிகளுள் வரும் தொடர்கள் உமாபதி சிவாச்சாரியாரைக் குறிக்கின்றமையால் இந்தநூலை அவரது சீடர்கள் யாரேனும் யாத்திருக்கலாம் அல்லது அவர் மரபிலுள்ளோர் ஆக்கியிருக்கலாமென அறிஞர்கள் கருதுவதாக பேராசிரியர் சிவலிங்கராஜா தனது ஈழத்து இலக்கியச்செல்நெறி எனும் நூலில் சுட்டியுள்ளார்.

அகத்திய மாமுனிவரால் நிறுவப்பட்டு பூசிக்கப்பட்ட சிவலிங்கம் இந்தப் பதியிலே காணப்படுவதால் அகத்தியர் தாபனம் என அழைக்கப்படுகின்றது. இராவணனுக்கும் அகத்தியருக்கும் சாமகான இசைப்போட்டி நிகழ்ந்த இடம் இதுவெனவும் நம்பப்படுகின்றது.

அகத்தியர் அமைத்ததாகக் கூறப்படும் சிவாலயம் அந்நியர் படையெடுப்புகளால் சிதைவடைந்துபோக எஞ்சிய பாகங்களைச் சேகரித்து பாதுகாத்து வருகின்றனர் ஆலய நிர்வாகிகள். இங்குள்ள கருங்கற்றூண்கள் சிலவற்றில் திரிசூல அடையாளம் தெளிவாகத் தென்படுகின்றது. இவைதவிர சில கற்களில் உட்குடைவுகளும் காணப்படுகின்றன. இங்கு பூசிக்கப்படும் சிவலிங்கம் அகத்தியர் தாபித்ததென நம்பப்படுவதுடன் பல்வேறு தாக்குதல்கள் சிதைப்புகளுக்குப் பின்னரும் அந்தச் சிவலிங்கத்தை வைத்துப் பூசிப்பதோடு சிவலிங்கத்துக்கு எதிரே அகத்தியர் திருவுருவினை வைத்து வணங்குகின்றனர்.

அகத்தியமாமுனிவரின் பாதத்தடங்கள் என்று கூறப்படும் கற்தறியை இங்குள்ள அகத்தியர் சிலைக்கு முன்னால் வைத்துள்ளனர். இங்குள்ள தொல்பொருள்களில் பல காணாமற்போய்விட்டன எனவும் சொற்பமானவையே எஞ்சியுள்ளதாகவும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர். தமிழர் பண்பாட்டியலின் எச்சங்கள் நம் கண்முன்னே சிதைவுறுவதும் அழிக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல.

பாடசாலைக் காலத்தில் உயர்தரத்தில் ஈழத்திலக்கியச் செல்நெறியைக் கற்றபொழுதில் திருக்கரசைப்புராணம் பற்றி அறிந்ததிலிருந்து அந்த இடத்தைத்தரிசிக்கும் வரை மிகப்பெரிய ஆலயமாக அது இருக்குமென எண்ணியிருந்த என் எண்ணங்கள் யாவிலும் மண்ணையெறிந்தது போல தென்னோலையால் வேய்ந்த சிறுகுடிசையில் வீற்றிருக்கிறார் ஈசன். தற்போது ஆலயக் கட்டுமானப்பணிகளும் நடைபெற்றுவருவதை நேரடியாகக் காணக்கிடைத்தது. ஆலயத்துக்குச் செல்லும்பாதை காட்டுப்பாதையாகவும் யானை போன்ற வனவிலங்குகளுக்கு குறைவில்லாததாகவும் காணப்படுகிறது.

இதனை திருக்கரசைப்புராணம் பின்வருமாறு


**‘காடெலாங் கரிநல்யானை கரையெலாம் பவளக்குப்பை**
**நாடெலா மிரத்ன ராசி நகரெலாம் நல்லோர் சங்கம்**
**வீடெலாஞ் செம்பொற்கூரை வெளியெலாஞ் செந்நெற் குன்றங்**
**கோடெலாம் மஞ்ஞை யீட்டம் குழியெலாங் கழுநீர்ப் போது’**

என்று கூறுகிறது.

இந்தச் சிவாலயத்துக்குச் செல்லும் வழி குண்டுங் குழியுமாக மிக மோசமானநிலையில் காணப்படுவதோடு, பொதுப்போக்குவரத்து வசதிகள் முற்றாக அற்ற நிலையில் தனிநபர் வாகனங்களிலே சென்று தரிசிக்கும் நிலை காணப்படுகின்றது. ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள தமிழர்தம் பயிர்ச்செய்கை நிலங்கள் சூறையாடப்பட்டுள்ளதோடு ஆலயக் கட்டுமானங்களுக்கும் இடையூறுகள் விளைவிக்கப்படுவதாக பிரதேசமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அரசியல்வாதிகளின் அலட்சியப்போக்கினால் நாள்தோறும் அல்லல்களுக்கு உள்ளாகும் தமிழ்மக்கள் ஆலயபரிபாலனசபையை உறுதிபட அமைத்து நல்ல தலைவரைத் தெரிவுசெய்துள்ளதாகவும் அவர் ஆக்கிரமிப்புகளை எதிர்த்து ஆலய நற்பணிகளை ஆற்றுவதாகவும் தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர்.



தமிழர்தம் தொன்மையினதும் நாகரிகத்தினதும் இருப்பிடம் இவ்விதம் கவனிப்பாரற்று நாள்தோறும் நலிவுக்குள்ளாக நாம் வேடிக்கை பார்த்திருப்பது புத்திசாலித்தனமல்ல. எமது பண்பாட்டின் எச்சங்களையும் தொன்மையையும் திட்டமிட்டு அழிக்கும் சக்திகளுக்கு அப்பால் எமது உதாசீனத்தால் எமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் அழிந்து போய்விடக்கூடாது. இந்தச் சிவாலயம் தொடர்பாக தமிழ்ப்பொதுமகனாக நான் தமிழ் அரசியல்வாதிகள், தொல்லியலாளர்கள், தமிழ் மற்றும் சைவ ஆர்வலர்களை வினயமாக வேண்டுவது யாதென்றால், தங்களின் சொந்த முயற்சியால் இன்றுவரை தமிழ்மக்கள் பாதுகாத்து வைத்திருக்கும் இந்தத் தொல்பொருள்களைப் பாதுகாக்கவும் ஆலயத்துக்குச் செல்லும் பாதையை செப்பனிட்டு மக்கள் பயணத்தை இலகுபடுத்தவும் மக்களின் தனிப்பட்ட முயற்சியால் மெல்லமெல்ல நடைபெறும் இவ்வாலய கட்டுமானப்பணிக்கு துணைபுரியவேண்டும் என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ரோகினி பரராஜசிங்கம்

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றிய திருமதி ரோகினி பரராஜசிங்கத்தில் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் எதிர் வரும் 27ஆம் திகதியாகும். அதை முன்னிட்டு இந்தக் கட் டுரை பிரசுரமாகின்றது)

## பல்கலை நூலகத்துக்காக அயராதுழைத்த பெருந்தகை



■ என்.செல்வராஜா, நூலியலாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தை வளர்த்தெடுத்த நூலக கர்களின் வரிசையில் ஆர்.எஸ். தம்பையா, சிற்றம்பலம் முருகவேள் ஆகியோரைத் தொடர்ந்து திருமதி ரோகிணி பரராஜசிங்கம் மூன்றா மவராவார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறைப் பிரதே சத்தைச் சேர்ந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் 1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பிறந் தவர். சிறுவயது முதலே வாசிப்பில் ஆர்வமிக்கவர். தன் இளமைக் காலத்தில் பெங்குவின் பதிப்புகளைத் தேடித் திரிந்து வாசித்து மகிழ்ந்தவர். அவரது நூல்களின் மீதான ஆர்வமே விலங்கியல் பட்டதாரியான அவரது வாழ்வின் திசையை நூல்களையும் நூலகங்களையும் நோக்கித் திருப்பியிருந்தது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாக நூலக ஊழியராக 1978ஆம் ஆண்டில் இணைந்து, உதவி நூலகராக அங்கு சேவையாற்றத் தொடங்கினார். (யாழ்ப்பாண வளாகம் 1979ஆம் ஆண்டு ஜனவரி முத லாம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது). சிக்கலான போர்க் காலப்பகுதியில், குறிப்பாக 1983 இனக்கலவரக் காலத்திலும், அதன் பின்னர் இந்திய இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்டிருந்த 1987 தொடக்கம் 1990 காலகட் டத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை சிறப்புற நிர்வகித்து வந்தவர் இவர்.

தனது நூலக உயர்கல்விப் பட்டத்தினை சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1983ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறப்புச் சித்திகளுடன் பெற்றுக்கொண்டவர். இந்தப் பட்டத் தேர்ச்சியின் பயனாக சிரேஷ்ட உதவி நூலகராகப் பதவி உயர்வினை 1983ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்டார். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகமும் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஓர் இராணுவ முகாமாகவே அது மாறிவிட்டிருந்தது. அவ்வேளையில் பல்கலைக்கழக நூலகத்தின் சேர்க்கை களை சமயோசிதமாக பாதுகாத்த பெருமை இவருக்கு உரியதாகும்.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமித்திருந்த ஒருநாள் இரவு அவரது உதவி நூலக ர் ஒருவரிடமிருந்து அவசர அழைப்பு வந்திருந்தது. அவரின் கூற்றுப்படி நூலகக் கட்டடம் தாக்கப்பட்டிருந் தது. நூல்கள் சிதறுண்டு கிடந்தன. அவற்றை உடன டியாகவும், பாதுகாப்பாகவும் அப்புறப்படுத்தாவிட்டால், பல்கலைக்கழக நூலகச் சேர்க்கைகள் அனைத்தும் அழிந்துவிடும். துரிதமாகச் சிந்தித்து மிகமுக்கியமான முடிவொன்றினை உடனடியாக எடுக்கவேண்டிய நிர்ப் பந்தம் திருமதி பரராஜசிங்கத்துக்கிருந்தது. நூல்களை அவசர அவசரமாக சேர்த்து எடுத்து லொறிகளில் ஏற்றி, தன்னிடமிருந்த சில்க் சேலைகளினால் அவற்றை மழையிலிருந்து ஓரளவு பாதுகாத்து, அவற்றை சாவ கச்சேரியிலுள்ள ஒரு பாடசாலை மண்டபத்துக்குக் கொண்டுசென்று அங்கு பத்திரப்படுத்தினார். அதற்கான முழுச்செலவினையும் தானே பொறுப்பேற்றார். ஆரம் பத்தில் நூல்களை அனுமதியின்றி அப்புறப்படுத்திய இவரது அருஞ்செயலை பல்கலைக்கழக நிர்வாகம் முதலில் கண்டித்தபோதிலும், பின்னாளில் அவரால் பாதுகாத்து வழங்கப்பட்ட 35 ஆயிரம் நூல்களைவிட்டு அவருக்கு அதே நிர்வாகம் பாராட்டுக் கடிதமொன்றினை யும் வழங்கியிருந்தது.

பிரதம நூலகராகவிருந்த சி.முருகவேள் 1994இல் ஓய்வுபெற்றவேளையில் திருமதி பரராஜசிங்கம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் நூலகராகப் பத வியேற்றிருந்தார். பின்னர் 1995ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி பிரதம நூலகராகப் பணியில் தொடர்ந் தார். இவரது பொறுப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் இருந்த வேளையில்தான் மீண்டும் ஒரு சிக்கல் ஏற்பட்டது. வரலாற்று முக்கியத்துவமான வலிகாமம் இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் காணப்பட்ட அந்த இறுக்கமான நிர்வாகக் கட்டமைப் பிற்குள்ளும் போக்குவரத்துச் சங்கடங்களுக்குள்ளும், பல்கலைக்கழக நூலகத்தை மீளவும் ஒழுங்கமைத்து வழிநடத்தவேண்டியிருந்தது. இவ்வாறாகத் தொடர்ந்து 27 ஆண்டு இடையறாத நூலகப் பணியினை மேற்கொண்டுவந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி நூலகர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

பல்கலைக்கழகத் தேவைகளுக்கான ஆராய்ச்சித்துறை யில் இவர் ஈடுபாடு காட்டிவந்ததன் பயனாக, லேசர் தொழில்நுட்பத்துறைக்கான சுட்டி மற்றும் சாராம்ச சேவைகள் பற்றிய வழிகாட்டிகளையும், நூலக விஞ் ஞான, தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான குறிப்புரை யுடனான வழிகாட்டியொன்றினையும், பட்டியலாக்கம், பகுப்பாக்கம், சுட்டிகள், மற்றும் நூலக முகாமைத்துவம் சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றார். யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், இலங்கை நூலகச் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினராகவிருந்து இந்த அமைப்புகளின் வளர்ச்சிக் கும் தனது கடின உழைப்பினை இவர் வழங்கியிருக்கி றார். பின்னாளில் பருத்தித்துறையில் தனது ஓய்வினை அனுபவித்து வந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி இயற் கையெய்தினார். தமிழ்கூறும் நல்லுலகுக்கும், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக நூலக ஆவணப்படுத்தலுக்கும் ஒப்பற்ற பணியாற்றிய திருமதி பரராஜசிங்கம் ஈழத்துத் தமிழ் நூலகர்களின் வரிசையில் குறிப்பிடத்தகுந்தவராக வரலாற்றில் பதிவுசெய்யப்படுவார் என்பது திண்ணமே.

■ நடேசு திருநாவுக்கரசு திருமாறன்

# பூமியைத் தாண்டியும் உயிரினங்கள் வாழலாம்

பூமி மட்டுமே உயிர்கள் வாழ்வதற்கு உரிய சூழலைக் கொண்டுள்ளது என்று கூறிவிடமுடியாது. உயிரினங் கள் வாழும் ஒரேயொரு கோள் பூமி என்று கூறப்படும் நிலை மாறுவதற்கு இன்னும் வெகுகாலம் இல்லை. எப்போழுதும் உங்கள் மனதில் ஆழமான கேள்விகளை உருவாக்கி கொள்ளுங்கள். உங்கள் ஆழமான கேள்விகள் மூலமே ஆராய்ச்சி உணர்வுகள் தூண்டப்படுகின்றன.

மனிதனுடைய சிந்தனை எல்லையற்றது. மனித சிந்தனைக்கு வரையறை காணப்படு கின்றதா? சற்று சிந்தித்துப்பார்த்தால், நாம் கற்பனை என்று நினைக்கும் அனைத்தும் சாத்தியமாக்கப்பட்டு கொண்டே இருக்கிறது என் பதை உணரலாம். யதார்த்தம் என்னவெனில் கற்பனை மூலமே கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்ப டுகின்றன. சாதாரணமாக மனிதர்களாகிய நாம் உருவாக்கிய 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய இந்த இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதக்கூ டிய இறுதி எண்ணை எம்மால் கூறமுடியுமா? நிச்சயமாக இல்லை. எல்லையற்றது. முடிவற் றது இதைப் போலவே இந்தப் பிரபஞ்சமும் எல்லையற்றது, முடிவற்றது.


மனிதனுடைய கற்பனையில் மனிதன் பிரபஞ் சத்தின் எல்லையை நோக்கிச் சென்றுகொண்டு இருப்பான். பிரபஞ்சத்தின் எல்லையை மனி தன் தொட்டுவிடுவானா? என்றால், இறுதி இலக்கத்தை எவ்வாறு அடையமுடியாதோ அதேபோல் இந்த பிரபஞ்சத்தின் எல்லையை யும் அறிய முடியாது. ஏனெனில் பிரபஞ்சம் எல்லையற்றது.

சொல்லப்போனால் பூமியை அண்மித்த கிர கங்களையே இன்றுவரை அடைந்துள்ளோம். அந்தக் கிரகங்களில் மனிதன் இல்லை என்ற முடிவுடன் உயிரினங்கள் இல்லை என்ற கூற்றை ஒரு போதும் ஏற்கமுடியாது. ஏனெனில் நாம் உயிர் வாழ்வதற்குத் தண்ணீரும் ஒக்சிசனும் அவசியம் என்ற கோட்பாடு எம்மிடம் இருந்து வருகின்றது. சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் பூமியில் அனைத்து சூழல்களும் ஒரே நிலையில் இல்லை. பெரும்பாலான சூழல்களில் உயிரினங் கள் வாழுகின்றன. எரிமலைகளிலும், வெந்நீர் ஊற்றுகளிலும் நுண்ணங்கிகள் வாழுகின்றன. உண்மை என்னவெனில் உயிர்கள் அந்தச் சுழல்களிலிருந்து உருவாக்கப்படுகின்றன. அந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கப்ப டுகின்றன. சாதாரணமாக ஆசிய நாடுகளில் வசிக்கும் ஒருவர் ஐரோப்பா செல்லும்போது அவஸ்தைக்கு உள்ளாகின்றார். விண்வெளி வீரர்கள் பூமியை போல் ஒரு சூழலை உரு வாக்கியே வாழ்கின்றனர். என்னுடைய வாதம் என்னவெனில் பூமியிலுள்ள உயிரினங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு உயிரினங் கள் வாழ்வதற்கு நீர், வளி அவசியம் என்ற முடிவிற்கு வந்துவிடமுடியாது.

இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் கணித்துக் கூறமுடியாத அளவுக்கு கிரகங்கள் உள்ளன. ஒவ்வொரு கிரகங்களிலும் அந்தந்தச் சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப உயிர்கள் எங்கும் தோற்றம் பெறலாம். பூமியில் காணப்படும் உயிரினங்கள் மட்டுமே உயிர்கள் என்று வரை யறை செய்யமுடியாது. சுருங்கக்கூறின், ஒக்சி சன், தண்ணீர் இவற்றால் தான் மனிதன் வேறு கிரகத்தில் வாழமுடியும் என்பது உண்மை. ஆனால் இவை இல்லாத எந்த கிரகத்திலும் உயிர்கள் இல்லை என்ற முடிவை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

மனிதன் பூமியில் இருந்து புறப்பட்டுவிட்டான். கொஞ்சம் கொஞ்சமாகத் தனது எல்லையை விஸ்தரித்துக் கொண்டே செல்கிறான். ஆனால், மனிதன் இன்னமும் ஞாயிற்றுத் தொகுதியைத் தாண்டிச் செல்லவில்லை என்பது உண்மை. பிரபஞ்சம் ஏராளமான எல்லையற்ற இலக்கங் களைக் கொண்டுள்ளது. ஞாயிற்றுத் தொகுதி அதில் ஒரு எண் மட்டுமே என்பதை மறந்து விடாதீர்கள்.

ஒரே இலக்கத்தை நாம் வெவ்வேறு வடிவங்க ளில் எழுதமுடியும். எனது கற்பனை என்னவெ னில் பூமியை ஒத்த கிரகங்கள் இந்தப் பிரபஞ் சத்தில் இருக்கும். அதை என்றோ ஒருநாள் மனிதன் அடைந்தே தீருவான். பூமியில் மட்டும் தான் உயிரினங்கள் இருக்கின்றன என்ற நிலை மாற வெகுகாலம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ்.மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் குருத்துவப் பொன்விழா இன்று சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

# பணிக்குருத்துவத்தில் பொன்விழாக்காணும் யாழ்.மறைமாவட்ட ஆயர்

அருட்தந்தை
எஸ்.எயின்சிலி றொஷான்

யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது பணிக் குருத்துவத்தின் பொன்விழாவில் பாதம் பதிக்கும் நன்நாள் இன்றாகும். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மாவட்டம் கரம்பொனில் தங்கமலர், ஞானப்பிரகாசம் தம்பதியினருக்கு அருமைப் புத்திரனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். இறைவனின் அழைப்பின் குரலுக்குச் செவிமடுத்து, புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் இணைந்து தனது மெய்யியல் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும், இறையியல் கல்வியை இந்தியாவின் புனேயில் உள்ள பாப்பிறைக் குருமடத்திலும் கற்றார். 1974ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம் திகதி அன்றைய யாழ். ஆயர் பேரருட்கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மறைத் தளங்களில் பங்குக் குருவாகப் பணியாற்றிய ஆயர் லண்டன் பல்கலைக்கழகத்தில் இறையியலில் முதுகலைமாணிப் பட்டத்தினையும், லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றார். இவரது பணி பன்முகப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒழுக்காற்று சபைத் தலைவராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரையாளராகவும், யாழ் பல்கலைக்கழகக் கலாநிதி, முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும், தேர்வுப் பொறுப்பாளராகவும், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆலோசனைச்சபை உறுப்பினராகவும், யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி வருகைப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, இலங்கை அதிபர் சேவை தேர்வில் முதல் தரத்தில் சித்தி பெற்று, புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபராகவும், இளவாலை கொத்தணி அதிபராகவும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்று யாழ். மறைமாவட்டக் குருமுதல்வராகவும், யாழ். புனித வளனார் அச்சகத்தின் முகாமையாளராகவும் அமர்ந்தவேளை, 2015ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸால் யாழ். மறைமாவட்ட ஆயராகத் திருப்பொழிவு பெற்றார்.

## மகத்துவமான கல்விப்பணி

ஆயர் கல்வியைக் கண்ணாகக் கருதியவர். இதனால் வடபுலக் கல்வி ஆளுமைகள் மத்தியில் தனக்கெனத் தனித்துவமான முத்திரையைப் பதித்துக் கொண்டார். இலங்கையின் கல்விக் கொள்கை இலக்கின்றிப் பயணிப்பதை கண்ணுற்று இளம் சந்ததியினருக்கு இருள் சூழும் அபாயம் இருப்பதைத் தூரநோக்குடன் சிந்தித்து, மூன்றாம் நிலைக் கல்விக்கு அத்திபாரம் இட்டு, பல தொழிற் கல்விக் கூடங்கள் எழுவதற்கு வழியமைத்தார். கட்டாயக் கல்வியுடன் சர்வதேச கல்வியையும் வருங்கால சந்ததி வளமாகப் பெற்றிட மொன்போட் சர்வதேசப் பாடசாலை அல்லைப்பிட்டியில் அமைய மொன்போட் அருட்சகோதரர்களை வரழைத்து கட்டியெழுப்பினார். பட்டப்படிப்புகள் சார்ந்த உயர் கல்வியினை அனைவரும் பெற்றிட பத்திரிசிய உயர் கல்வி நிறுவகத்தை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி சென்ற வருடம் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது அவர் கையால் அத்திபாரக் கல்லிட்டு, அதனைத் தனது எதிர்காலக் கல்வித்திட்டக் கனவாக அமைத்து வருகின்றார்.

இறையியல் கல்வியைக் குருக்கள் மாத்திரம் கற்கும் நிலையை மாற்றிப் பொது நிலையினரும் அக்கல்வியைக் கற்க புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் அமைத்தார். உளவியல் கல்விக்கு உருக்கொடுக்க அகவொளி நிறுவகத்தின் சேவையை பன்முகப்படுத்தினார். ஆயர் குருவாகவும், குரு முதல்வராகவும், ஆயராகவும் இருந்த காலப் பகுதி தமிழர் தம் வாழ்வில் போர் மேகம் சூழ்ந்த இருள் மயமான காலமாகும். இந்தக் காலப்பகுதியில் அநீதிக்கெதிராக குரல் கொடுத்து எமது தேசத்தில் சமாதானம் நிலவக் கடினமாக உழைத்தார். இதன்மூலம் தமிழர்களின் தலைநிமிர்வுக்கு நீதியின் வழியில் நின்று உழைத்தவர்களாக விரல்விட்டு எண்ணக் கூடியவர்களுள் குரல் விட்டுச் சொல்லக் கூடியவராக ஆயர் விளங்குகின்றார். சமயங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தில் ஆயர் காட்டிவரும் தீவிர ஈடுபாடு சமயங்களுக்கிடையிலான பாலமாக அவரை அடையாளப்படுத்தியுள்ளது.

“இறையியல் கல்வியைக் குருக்கள் மாத்திரம் கற்கும் நிலையை மாற்றிப் பொது நிலையினரும் அக்கல்வியைக் கற்க புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் அமைத்தார். உளவியல் கல்விக்கு உருக்கொடுக்க அகவொளி நிறுவகத்தின் சேவையை பன்முகப்படுத்தினார்.

## தன்னிகரற்ற ஆளுமை

ஆன்மீகவாதிகள், அரசியல்வாதிகள், சர்வதேச அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் பிரமுகர்கள் ஆயர் இல்லம் நாடி வந்து ஆயரிடம் கலந்துரையாடி ஆலோசனைகள் பெற்றுச் செல்வதையும் அதனைச் செயற்படுத்துவதையும் வரலாற்று ஓட்டத்தில் எம்மால் தரிசிக்கமுடிகின்றது. இது ஆயரின் ஆன்மீகம், கல்விசார், அறிவியல் மற்றும் அரசியல் தளங்களில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த புலமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு அடிப்படையாக விளங்குவது ஊடக சுதந்திரமாகும். காலத்தின் தேவை உணர்ந்து கத்தோலிக்க ஊடக மையமாக மறைநதியை உருவாக்கி, மறை அலை தொலைக்காட்சி சேவை மூலம் மறைமாவட்ட நிகழ்வுகள் அனைவராலும் அறியப்பட வழி சமைத்தார். அத்துடன் ஏனைய அச்சகங்களுக்கு நிகராக யாழ்ப்பாணத்தின் மிகப் பழம்பெரும் அச்சகமான கத்தோலிக்க அச்சகத்தை நவீனமயப்படுத்தி இலங்கையின் ஆரம்ப கால தமிழ்க் கத்தோலிக்கப் பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றி வருகின்றார்.

‘வல்லவர்கள் வேண்டாம் நல்லவர்கள் வேண்டும்’ என்ற விருது வாக்குடன் பணிக் குருத்துவத்தையும், ஆயத்துவத்தையும் அலங்கரிக்கும் எமது ஆயர் தமிழ் மக்களுக்கு நல்லாயனாக இருந்து ஆற்றி வரும் பணிகள் போற்றுதலுக்குரியவை, பாராட்டுக்குரியவை, நன்றிக்குரியவை. ‘நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும் அக்கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்’ (யோவான் 15:16) என்ற இறைமகன் இயேசுவின் இறைவாக்கு ஆயரில் நிறைவு பெறுவதை இறைமக்களாகிய நாம் கண்டு மகிழ்வடைகின்றோம். மரியன்னை மீது மிகுந்த பக்திகொண்டு அவரைத் தனது தாயாகப் போற்றிவரும் ஆயர் உண்மையில் பேறுபெற்றவர் என்று தான் கூறவேண்டும். ஏனெனில் மருதமடு அன்னை முதற் தடவையாக 1974ஆம் ஆண்டு யாழ். மண்ணிற்கு வருகை தந்த காலப்பகுதியில் ஆயர் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இன்று மருதமடு அன்னை இரண்டாம் தடவை யாழ். மண்ணிற்கு வருகை தந்திருக்கும்போது ஆயர் தனது குருத்துவப் பொன் விழாவினைக் காண்கின்றார்.

## வம்பு செய்யும் மாணவர்கள்..!

அத்தி பூத்தால் போல் வருவார்
புத்தி சொல்லச் சிரிப்பார்!
கத்திக் கலகம் பண்ணி
கற்பித்தலைத் தடுப்பார்!

பிரார்த்தனை முடிந்த பின்னே
பிந்தியே தினம் வருவார்!
இலவசப் பாடநூல்கள்
இல்லத்தில் இருக்குதென்பார்!

பாடவேளை நடக்கையிலே
பாடசாலை வலம் வருவார்!
தூர ஓட்டம் காட்டி
துயரத்தே களைக்க வைப்பார்!

எப்போதும் எதிர்ப்பேச்சால்
கற்பிக்க விட மாட்டார்!
குருவே தெய்வமென்றால்
அருவருக்கச் சிரிப்பார்!

தவறான தொடர்பிலக்கம்
தந்தே தமைக் காப்பார்
பெற்றோர் வராதிருக்க
எச்சரித்துத் தடுப்பார்!

கம்போடு மிடுக்காய் வந்த
கம்பீர காலம் போய் ....
வம்பு செய்யும் மாணவரை
வழிப்படுத்த வழி சொல்வீர்!

இரா.ஜெயக்குமார்



புதன்பொய்கை க்கு நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்



அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் வெள்ளை ஈ!



ஸ்ரீதரன் தமிழினி
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்

வெள்ளை ஈக்களின் பரவல் குறித்த கரிசனைகள் கடந்த சில வாரங்களாகவே வெளிப்படுத்தப்பட்டு வந்த போதிலும், அதன் ஆபத்தம்சங்கள் தற்போது உச்சக்கட்டமாக உணரத் தலைப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் வெள்ளை ஈக்களின் பெருக்கத்தாலும் தாக்கத்தாலும் தம் பொருளாதாரத்தைப் பறிகொடுத்து நிற்கும் குடும்பங்கள் பல. வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காய் ஏற்றுமதி மாத்திரமல்லாது இளநீர் வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றை நம்பியிருக்கும் பலநூறு குடும்பங்களின் பொருளாதாரம் இன்று புரட்டிப்போடப்பட்டுள்ளது என்கின்றார் கிளிநொச்சியைச் சேர்ந்த பண்ணையாளர் ஒருவர். கிளிநொச்சியில சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலுள்ள தென்னைகளில் வெள்ளை ஈக்களின் தாக்கங்கள் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளன.



### தோற்றமும் பரவலும்

வெள்ளை ஈக்கள் தெற்காசியாவுக்கு உரித்தானவை அல்ல. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் 2004ஆம் ஆண்டு இந்த ஈக்கள் முதன்முதலாக அவதானிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 2016ஆம் ஆண்டிலும் இலங்கையில் அவதானிக்கப்பட்ட இந்த ஈக்கள் அதன் பின்னர் இலங்கைக்குள் தொடர்ச்சியாக தனது இருப்பை உறுதிசெய்து வருகின்ற போதிலும் இவ்வருடப் பரவல்தான் அதியுச்சம் வாய்ந்தது என்கின்றனர் தாவரவியலாளர்கள்.

வெள்ளை ஈக்கள் பொதுவான வெப்பத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பரவக் கூடியவை. இனிவரும் நாள்களில் அதீத வெப்பநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் வெள்ளை ஈக்களின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என துறைசார் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இயல்பாகவே கூடுதல் பரவுகையுடைய வெள்ளை ஈக்களுக்கு வடமாகாணத்தில் சமீபத்திய தட்பவெப்பநிலை ஒரு போனஸ். இந்தக் காலநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி வெள்ளை ஈக்கள் தங்கள் பரவுகையை பலமடங்கு உயர்த்தவே செய்யும் என்பதால் உச்ச விழிப்புணர்வுடனும் தற்காப்பு நடவடிக்கைகளுடனும் செயற்பட வேண்டியது பொதுமக்களிடத்தும் பண்ணையாளர்களினதும் காலத்தேவையாகவே உள்ளது. இல்லையேல் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்து, இப்போது 100 தொடக்கம் 120 ரூபா வரையில் விற்கப்படும் தேங்காய்கள் இனிவரும் காலங்களில் 250 ரூபா தொடக்கம் 300 ரூபா வரைக்கும் விற்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

### தென்னையை மட்டுமா வெள்ளை ஈ தாக்கும்?

வெள்ளை ஈ என்பது ஒரு வெள்ளை இலையான். அது தென்னையில் மட்டுமல்ல மாதுளை, கறிவேப்பிலை, உழுந்து, பயறு, நாவல், எலுமிச்சை, வாழை போன்ற மரங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இவற்றின் முட்டைகள் சுருள் வடிவத்தில் இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். குஞ்சுகளும் முதிர்ந்த ஈக்களும் ஓலையின் அடியில் இருந்து சாற்றை உறுஞ்சுகின்றன. இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவக் கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுகின்றது. அதனால் ஓலைகளின் மேல் கருப்பு நிறமுள்ள பூஞ்சணம் படர்கின்றது.

20 தொடக்கம் 30 நாள்களில் புழுப்பருவம் வளர்ச்சியடைந்து, வட்டம் கூட்டமாக தென்னை ஓலையின் அடிப்பகுதியை அடையும். காற்றின் மூலம் அடித்துச் செல்லப்பட்டு ஒரு மரத்தில் இருந்து அடுத்தடுத்த மரங்களுக்கும் அருகில் உள்ள தோட்டங்களுக்கும் பரவி பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றினைக் கட்டுப்படுத்த தற்போது இன்னொரு பூச்சியினத்தை தென்னை மரங்களில் பரப்பி விடுகின்றனர். இவை இந்த ஈக்களினை தின்று அழிக்கக்கூடியவை என்று சொல்லப்படுகின்றது. எனினும் இந்தத் திட்டம் முழுமையான வெற்றியைப் பெற்றுவிட்டதா என்ற தெளிவுபடுத்தல் இன்னமும் வழங்கப்படவில்லை. ஆதலால், தென்னைசார் பொருளாதாரத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பலநூறு குடும்பங்களுக்கு வெள்[illegible] யாகவே தொடரப்போகின்றனவா? என்ற ஐயப்பாடு [illegible]




# சங்ககாலத்தில் வணிகமும் வணிக நடைமுறையும்

## தமிழர்தம் வணிகத்தை ஆவணப்படுத்தும் நன்னூல்!

நி.பிரதிகா

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் நம் ஆதித் தமிழர்கள். இயல், இசை, நாடகம் என்ற அடிப்படையில் முன்னோர்களால் தமிழ் வளர்க்கப்பட்டது. உலகின் மூத்தமொழியான தமிழ்மொழியை தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களின் கையோங்கியிருந்த காலம் சங்ககாலம் என்று கூறலாம். அன்று தொட்டு இன்று வரையிலும் சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளைப் பல அறிஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆய்வுகள் மூலம் சேகரித்த தகவல்களைத் தொகுத்து, நூல்களாக எமக்குத் தருகின்றனர். அந்த வகையில் பேராசிரியர் சிவஞானமூர்த்தி சிவநேசன் 'சங்க இலக்கியத்தில் வணிகமும், வணிக நடைமுறையும்' எனும் தொனிப் பொருளில் சங்ககாலத்து வியாபார நடைமுறைகளை விளக்கமுற்பட்டமை பாராட்டுக்குரிய விடயம்.

சங்க இலக்கியங்களிலே, தமிழின் தொன்மையும், பெருமையும் அதனோடு சேர்ந்த தமிழரின் பாரம்பரியமும் பண்பாடும் எவ்வாறு மேலோங்கி இருந்தது என்பது பற்றிய நூல்கள் பல வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் சங்க இலக்கியத்திலே தமிழரின் வணிக நடைமுறைகள் பற்றிய தெளிவான விளக்கத்தை விபரித்து நூல்களாக வெளியிட்டமை அரிதே. அந்த வகையில் பேராசிரியர் சிவநேசன் எழுதிய இந்நூல் தமிழுக்கு அருமருந்தாகும். வாசிப்பின்போதே, சங்ககாலத்து வணிகருள் ஒருவராக வாசகர்களையும் வாழவைக்கும் என நம்புகிறேன். சங்க இலக்கியமும் தமிழர் பண்பாடும், பண்டைக்காலத் தமிழரின் வணிக மேம்பாட்டுக்கான துணைச்சேவைகள், விவசாயமும், கைத்தொழிலும் இறுதியாக வணிக வளர்ச்சியில் சங்ககாலப் பெண்களின் வகிபாகம் என்று ஐந்து இயல்களாக இந்நூல் வடிவமைந்துள்ளது.

சங்க இலக்கியத்தின் தொன்மை பற்றிய நூல்கள், அவற்றை எழுதிய அறிஞர்கள் பற்றிய தகவல்கள், அத்தோடு தமிழர்களின் பண்பாடு, மற்றவர்களுடனான உறவு பற்றியும் நூலாசிரியர் எடுத்தியம்பியுள்ளார். கி.மு. காலத்திலிருந்து தமிழர்களின் வணிகமுறை வளர்ச்சியடைந்த விதம், பண்டமாற்றுமுறை, கடல் கடந்து செய்யப்பட்ட வணிகம், வரி அறவீட்டு முறை, தெருக்களில் மேற்கொள்ளப்பட்ட வியாபாரங்கள், வணிகத்தில் கடைப்பிடிக்கும் தர்மங்கள் எனப் பண்டைய வணிக முறை பற்றியும், வணிக வளர்ச்சியில் நாணயங்கள் தோன்றிய விதம், கடல் வழி வணிகத்துக்காக துறைமுகங்களை உருவாக்கி அவற்றைக் கையாண்ட பாங்கு, அதனை அண்டி பட்டினங்கள் உருவான விதம், சங்ககாலத்து துறைமுகங்கள் என்னென்ன என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு பண்டைய தமிழர்கள் வணிகப் போக்குவரத்துக்காக குதிரை, கழுதை, ஒட்டகம் என்பவற்றைப் பயன்படுத்திய விதம், நீர் வழிப் போக்குவரத்துக்காக மரக்கலம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விடயங்களையும் நூலாசிரியர் பதிவுசெய்யத் தவறவில்லை. முத்து, நெசவு உற்பத்திகள், அகிலும் ஆரமும், கள்ளு, மிளகு, யானைத்தந்தம், உப்பு போன்றவை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது தொடர்பிலும் கூறப்பட்டுள்ளன. இறுதியாக, பெண்ணியம் பற்றிப் பேசுகிறார் நூலாசிரியர். அதில் பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு மீண்டு வந்தனர், காலப்போக்கில் வணிக மாந்தர்களாகவும் மாறி பொருளாதார வளர்ச்சிக்குப் பணியாற்றினர் எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சங்ககால நூல்களான அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நற்றிணை மற்றும் ஐங்குறுநூறு போன்ற பல்வேறுபட்ட சங்ககால நூல்களிலுள்ள இலக்கிய நயம்மிக்க பாடல் வரிகள் மூலம் நமக்கு விளக்கமுற்பட்டுள்ளார். 1960 தொடக்கம் 2021 வரையிலுள்ள பல பேராசிரியர்கள், அறிஞர்கள் எழுதி வைத்த பண்டைத்தமிழரின் வரலாறு பற்றிய நூல்களை உசாத்துணையாகக் கொண்டு, அவற்றிலிருந்து சேகரித்த தகவல்களைத் தொகுத்து இந்நூலை நூலாசிரியர் வடிவமைத்துள்ளார். வாசிப்பின் நடுவே ஆங்காங்கே இலக்கிய மொழிநடையுடன் கூடிய [illegible]பாணியிலான எழுத்து வடிவம் காணப்படுகிறது. இருப்பினும் தமிழ் ஆர்வம் கொண்ட, தமிழிலே ஊறி ஊற்றெடுக்கும் தமிழ்ப் பற்றாளர்களுக்கு இந்நூல் சுவாரசியம் மிக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

2023 ஆம் ஆண்டு உலகின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக சர்வதேசத்தில் 198 நாடுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கை தொடர்பிலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

"இலங்கை அரசமைப்பு அனைவரும் சமம் எனக் கூறுகிறது. ஆனால், உயர் கல்வி, அரச வேலைவாய்ப்புகள், வீட்டுவசதி, சுகாதாரம், மொழி ரீதியான ஒடுக்குமுறை, போன்றவற்றின் மூலம் தமிழர்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் போராளிகளை அரச படையினர் தொடர்ச்சியாகக் கண்காணித்தும் துன்புறுத்தியும் வருகின்றனர்.

மலையகத் தமிழர்கள் 'மலையகம் 200' என்ற தொனிப்பொருளில் தமது 200 ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடினார்கள். இவர்களுக்குச் சொந்தமாக காணிகள் இல்லை. தோட்டக் காணிகளிலேயே வசித்து வருகின்றனர். இதனால் இவர்கள் அரசாங்கம் வழங்கும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

2022ஆம் ஆண்டுமுதல் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் பொலிஸாரின் சித்திரவதை தொடர்பாக 560 முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன. 2021ஆம் ஆண்டு நீதி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிராக தமிழ்க் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மாவீரர்களை நினைவு கூர்ந்ததாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேச மக்கள் தமது நிலங்களை அணுக முடியாத நிலையில் உள்ளனர். உயர்பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் உட்பட ஏனைய நீதிமன்றங்களிலும் பல வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டபோதும் காணி உரிமையாளர்களினால் தமது காணிக்குள் கால்வைக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் இராணுவத்தினர் சுற்றுலா விடுதிகளையும் பண்ணைகளையும் அமைத்து வருகின்றனர். தமிழ்ப் பிரதேசங்களில் அரசமரங்கள் நடப்படுவதையும் புத்த விகாரைகள் அமைக்கப்படுவதையும் சிறுபான்மை மக்கள் குடியேற்றத்திட்டத்துக்கான முதல்படி என்றே எண்ணுகின்றனர். 2 ஆயிரத்து 982 ஏக்கர் தனியார் நிலம் இப்போதும் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 15 நலன்புரி நிலையங்கள் உள்ளதாகவும் இவற்றைவிட 2 ஆயிரத்து 175 இடம்பெயர்ந்த குடும்பங்கள் உறவினர் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருவதாகவும் ஜனாதிபதி நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர்களிடம் பாதுகாப்பு படையினர் புகைப்படங்களையும் ஆதாரங்களையும் கோருவதாகவும், தாங்கள் ஒத்துழைக்க மறுக்கும் பட்சத்தில் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான அல்லது யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் நினைவு தினம் போன்ற நிகழ்வுகளில் தாங்கள் செய்தி சேகரிக்க விடாமல் தடுக்கப்படுவதாகவும் தமிழ் ஊடகவியலாளர் தெரிவித்துள்ளனர். மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும், குற்றபுலனாய்வுப் பிரிவினரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களையும், துன்புறுத்தல்களையும் விடுத்து வருகின்றனர் ' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தடுப்புக்காவலில் கொல்லப்பட்டோர் தொடர்பான விவரங்களும், விடயங்களும்கூட அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## அகழ்வுப்....

அகழ்வுப்பணி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் மருத்துவமனைக்கு முன்பாக எலும்புக்கூடொன்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் ஆரம்பித்திருந்தனர்.

தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்தே இன்றையதினம் காலை 8.30 மணிமுதல் அங்கு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட இருந்தன. இந்த நிலையில் அந்த அகழ்வுப்பணிகள் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்னிரவு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## தமிழரசுக்கு...

மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளுக்கு எதிராகவும், ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச் செய்யக் கோரியும் திருகோணமலையை சேர்ந்த ஒருவரால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் கடந்த தவணையின்போது எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் ஆட்சேபனையைத் தெரிவித்ததால், ஏனைய எதிராளிகள் தமக்கும் ஆட்சேபனையைத் தெரிவிக்கவேண்டிய தேவையுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தனர். அவர்களின் ஆட்சேபனைக்காக வழக்கு இன்றுவரை திகதியிடப்பட்டிருந்த நிலையில், இன்று மீளவும் விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளது.

வழக்கில் கடந்த தவணையின்போது, தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த ரட்ணவடிவேல் என்ற நபர் தன்னை இடைபுகு மனுதாரராகச் சேர்க்கும்படி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அவர் இடைபுகு மனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு சுமந்திரன் எதிர்ப்பைப் பதிவுசெய்யவில்லை. ஆனால், ஏனைய எதிராளிகளும் வழக்காளியும் ரட்ணவடிவேல் என்ற நபர் வழக்கில் இடைபுகு மனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இடைபுகு மனுதாரராக அவர் சேர்க்கப்படும் பட்சத்தில் விரைந்து முடிக்கப்பட வேண்டிய தேவையுள்ள இந்த வழக்கு இழுத்தடிக்கப்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆதலால், இது தொடர்பான ஆட்சேபனையும் நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-ம)

## மனவளர்ச்சி...

துள்ளார். குறித்த சகோதரியும் உயிரிழந்ததை அடுத்து மருதங்கேணியில் உள்ள பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் அந்தப் பெண் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து சகோதரனால் கடந்த டிசெம்பர் மாதம் அந்தப் பெண் பொறுப்பேற்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் உடல்நிலை மீண்டும் பாதிப்புக்குள்ளானதைத் தொடர்ந்து மீண்டும் மருதங்கேணி பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் சகோதரனால் அந்தப் பெண் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு இல்லத்தில், பெண்ணின் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடந்த மாதம் 10ஆம் திகதி சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த பெண் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை மருத்துவமனையிலேயே தெரியவந்துள்ளது. தனக்கு நேர்ந்த கொடுமைகள் தொடர்பில் குறித்த பெண் மருத்துவமனையில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

இதன்போதே, பணத்துக்காக சகோதரனின் ஏற்பாட்டில் பலருடன் கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் அந்தப் பெண் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் போதைப் பொருளை வலுக்கட்டாயமாக பெண்ணை நுகரச் செய்து எட்டு பேர் கொண்ட கும்பல் ஒன்றினால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கும் அந்தப் பெண் உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதன்காரணமாகவே அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. பின்னர், எதுவும் நடக்காதது போன்று சகோதரனால் மருதங்கேணி பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் கடந்த மார்ச் மாத இறுதியில் அந்தப் பெண் மீண்டும் கொண்டுசென்று சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபை வாசுதேவா வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட நிலையில் மருத்துவ பரிசோதனையையும் மேற்கொண்டார்.

இதன்போதே குறித்த பெண் தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கை மற்றும் மருத்துவப் பரிசோதனை அறிக்கை என்பன யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-100,26,125)

## அநுரவுடன்...

மாதத்துக்குள் நடத்துவதற்குத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்துள்ளார். ஐக்[illegible] மக்கள் சக்தியின் தலைவர் ச[illegible]றும் ஜே.வி.பி. அநுரகுமார தி[illegible]ாயக்க ஆகிய இருவருக்குமிடையிலான விவாதத்துக்குரிய திகதிகளை ஜே.வி.பி. முன்மொழிந்துள்ளது. இந்த நிலையிலேயே, மே மாதத்துக்குள் விவாதம் நடத்துவதற்கு தான் தயார் என்று சஜித் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொருளாதாரம் தொடர்பில் எமது கட்சியின் பொருளாதாரக்குழுவுடன் விவாதத்துக்கு வருமாறு ஜே.வி.பி.யின் பொருளாதாரக்குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சவால் விடுத்திருந்தார். இந்தச் சவாலை ஏற்காது அதில் இருந்து தப்பும் வகையில் இரு கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் விவாதம் நடத்தலாம் என ஜே.வி.பி. கூறியது. தற்போது திகதியும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நாம் விவாதத்துக்குத் தயார். தலைவருடனான விவாதத்துக்கு மட்டுமல்ல பொருளாதாரக்குழுவுடனான விவாதத்துக்கும் தயார். மே மாதத்துக்குள் இரு விவாதங்களையும் நடத்தலாம். ஓடி ஒளியாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக்குழுவுடனும் விவாதத்துக்கு வரவேண்டும்" - என்றார். (அ-ம-44)

## ஈரான்...

ரைசி இன்று இலங்கைக்குக் வருகை தரவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அழைப்பின் பேரில், ஈரான் ஜனாதிபதி ஒருநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகின்றார். 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாட்டின் இலங்கைப் பயணத்துக்குப் பின்னர் ஈரான் ஜனாதிபதியொருவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கின்றமை இதுவே முதல் தடவையாகும்.

ஈரான் ஜனாதிபதியின் பயணத்தின்போது, ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்போது கைசாத்திடப்படவுள்ளன. மகாவலித் திட்டத்தின் பின்னர், நாட்டின் மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இணையும் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரான் மற்றும் இலங்கை ஜனாதிபதிகளின் தலைமையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் என்பது இலங்கை வரலாற்றில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தென்கிழக்கு பகுதியின் உலர் வலயத்தில் நிலவும் நீர்ப்பற்றாக்குறையைத் தணிப்பதற்காக, சுற்றுச்சூழலுக்கும், நீர் மூலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், உமாஓயாவில் வருடாந்தம் சேரும் 145 கனமீற்றர் நீருக்கு மேலதிகமான நீரை கிரிந்திஓயாவுக்கு திருப்பிவிடுவதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதனால் பல்லாயிரம் ஹெக்ரேயர் விளைநிலங்களில் புதிதாக விவசாயம் செய்ய முடிவதுடன், வருடாந்தம் 290 ஜிகாவாட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு வழங்கமுடியும். ஆதலால், ஈரானின் இந்த அபிவிருத்தித் திட்டம் இலங்கையின் வரலாற்றில் முக்கியமான திருப்பமாகவே பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுப்பர் கிங்ஸை தோற்கடித்து சுப்பர் ஜெயின்ட்ஸ் அசத்தல்



ஸ்ரொய்னிஸ்

**சென்னை, ஏப். 24**

**ஐபி.எல். தொடரில், நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ஸ்ரொய்னிஸின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க சென்னையை வீழ்த்தி அபாரமாக வெற்றிபெற்றது லக்னோ.**

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸுக்கு ஆரம்ப வீரர் ரகானே ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றத்தை வழங்கினாலும் மறுமுனையில் ஹெய்க்வாட் அற்புதமாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். ஆனால், முன்வரிசை வீரர்களான டாரி மிச்செல், ஜடேஜா இருவருடைய இன்னிங்ஸும் அணியைப் பின்னடைவுக்குள் ளேயே தள்ளியது. டாரி மிச்சல் 10 பந்துகளில் 11 ஓட்டங்களையும், ஜடேஜா 19 பந்துகளில் 16 ஓட்டங்களையும் மட்டுமே பெற்றனர். ஜடேஜா ஆட்டமிழந்த பின்னர் களமிறங்கினார் டுபே. ஆரம்பம் முதலே அவர் வாணவேடிக்கை காட்டினார். சென்னை சுப்பர் கிங்ஸின் 'சிக்சர் ஸ்பெஷலிஸ்ட்' என்ற பட்டத்துக்கு பொருத்தமானவர் என்பதாகத்தான் நேற்று டுபேயின் ஆட்டம் அமைந்தது. மறுமுனையில் ஹெய்க்வாட் 'கிளாசிக்' ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் கடந்தார். 27 பந்துகளில் 66 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் டுபே. டோனி இறுதிப் பந்தில் பவுண்டரி விளாச 4 விக்கெட்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ். ஹெய்க்வாட் 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணிக்கு ஆரம்ப வீரர் குயின்டன் டி ஹொக் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். அணித்தலைவர் கே.எல்.ராகுலும் 16 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஸ்ரொய்னிஸ், படிக்கல் இணைந்து விக்கெட் சரிவுகளைத் தற்காலிகமாக நிறுத்தினார்கள். ஆனால் இந்த இணைப்பாட்டத்தால் ஆட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஏனென்றால் படிக்கல் ஒரு நாள் ஆட்டத்தையும் விட மோசமாக சராசரியில் விளையாடிக் கொண்டிருந்தார். அவர் 19 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், பதிரணவால் வீழ்த்தப்பட்டார். அதன்பின்னர் களமிறங்கிய பூரன், ஸ்ரொய்னிஸுடன் சேர்ந்து ஆட்டத்தை மாற்ற எத்தனித்தனர். அதில் வெற்றியும் கண்டனர்.

15 பந்துகளில் 34 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் பூரன். மறுமுனையில் சதம் கடந்தார் ஸ்ரொய்னிஸ். இறுதி 3 ஓவர்களில் 47 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், ஹுடாவும், ஸ்ரொய்னிஸும் இணைந்து சென்னையின் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்தனர். 3 பந்துகள் மீதமிருக்கையில் இலக்கை விரட்டி வெற்றிபெற்றது லக்னோ. ஸ்ரொய்னிஸ் 124 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

(ம)

# இலவச அரிசி விநியோகம்

*யாழ்ப்பாணம், ஏப். 24*

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட, பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களுக்கு, அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்கள் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலவச அரிசி விநியோகம் இடம்பெற்றது.

(ப

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியோரமாக
**14 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.**
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
(CS/54800) J-1
தொடர்பு:- 075 944 4601

## மலிவு விற்பனை

இன்று முதல் 5 நாட்களுக்கு மட்டும் பூங்கன்றுகள், பூச்சாடிகள் 20% விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.
**மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.**
தொடர்புகளுக்கு: 075 944 4601

## பெயர் மாற்றம்

10ம் வட்டாரம் நெடுந்தீவில் வசிக்கும் **சந்தியாப்பிள்ளை அருள்ராஜன்** ஆகிய நான் எனது பெயரை **சந்தியாப்பிள்ளை அருள்நேசன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சந்தியாப்பிள்ளை அருள்நேசன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சந்தியாப்பிள்ளை அருள்நேசன்**

(CS/54806) J-1

## வேலையாட்கள் தேவை

- Wins Cleaning service, Wins Home care service ஆகிய நிறுவனங்களுக்கு முன் அனுபவம் உடைய Coodinator's **தேவை.** (மோட்டார் சைக்கிள் மற்றும் நகர் புறத்தை அண்மித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்). **(யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி).**
- முதியவர்களை மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை வைத்தியசாலையில் அல்லது வீடுகளில் வைத்து பராமரிப்பதற்கு முன் அனுபவம் உள்ள **பணியாளர்கள் தேவை. (யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு)**

077 666 4438, 077 666 2953

# மரண அறிவித்தல்



பிறப்பு 02.11.1949 — இறப்பு 23.04.2024

## செல்வி அன்னபாக்கியம் சிவசிதம்பரம்

காரைநகர், தங்கோடை, பொன்னுடையார் வளவை பிறப்பிடமாகவும், இல.99 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வி அன்னபாக்கியம் நேற்று (23.04.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுடையார்.வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் தம்பதியரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், தையல்நாயகி (Canada), வேலுப்பிள்ளை, சிவபாக்கியம், சிவயோகம், சிவகுமாரி, இராமச்சந்திரன் (அப்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் செல்வராணி, தவராசா, பேரம்பலம், சுந்தரலிங்கம், மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகராசா - சித்திரா, தர்மவர்த்தினி - சற்குணராசா, தர்மவாகினி - கிரிதரன், சிவரூபா - ஹரிகரன், சிறிகரன் - தாட்சாயினி, சிவதர்சினி - கருணாகரன், பிரியதர்சினி - காண்டீபன், சுதாகரன் - மிதுலா, சர்மிளா - செல்லப்பா, சங்கீதா - சதீஷன் ஆகியோரின் பாசமிகு பெரியதாயும், செல்வரஞ்சினி, வசீகரன் - பிறிஷ்னி ஆகியோரின் அன்பு மாமியும், ராம், சுருதி, லாவண்யா, ரிஷி, அஸ்வினி, அர்ச்சனா, அருண், அகிலன், அகரன், சீயான், மித்திரா, கிஷான், சச்சின், சேயோன், மிஸ்ஷிகா, விகான், அஜேய், பவிஷான், மதுஷான் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2024) வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**S.இராமச்சந்திரன்**
077 391 0667

(CS/54810) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.